# பொருளியல்
# ECONOMICS

## INTERNATIONAL TRADE

1999

## 6.1 சர்வதேச வர்த்தகம்


திரு. வே. கருணாகரன்
B. A. HONS. Dip. in Ed.
ஆசிரியர்,
யா/ கனகரத்தினம் ம. ம. வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நூலகம் அன்பளிப்பு வே. கருணாகரன்

# பொருளியல்





# ECONOMICS

## INTERNATIONAL TRADE



1999

## 6.1 ❀ சர்வதேச வர்த்தகம்


திரு வே. கருணாகரன்
B.A. HONS Dip. in. Ed.
ஆசிரியர்
யாழ். கனகரத்தினம் ம.ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Title | : | International Trade |
| Author | : | Velautham Karunakaran |
| Address | : | 215, Navalar Road,<br>Jaffna. |
| Subject | : | Economics |
| Language | : | Tamil |
| Pages | : | 60 |
| First Edition | : | January 1999 |
| Copy Right | : | Mrs. Sayanthi Karunakaran |
| Printers | : | Gangai Computer Print & Roneo<br>Navalar Road, (Near Brown Road)<br>Jaffna. |
| Price | : | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

உயர்தர வகுப்பிற்குரியதும், பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்குரியதுமான பொருளியல் பாடத் திட்டத்திற்கு அமைவாக பொருளியல் பாட நூல்கள் பெருமளவில் தமிழில் இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் உயர்தர வகுப்பிற்கான பாடநூலாகக் கொள்ளத் தக்க பொருளியல் நூல் ஒன்றின் ஒரு பகுதியை திரு. கருணாகரன் அவர்கள் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

தேசிய கல்வி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடத்திட்டக் கருத்தரங்குகளிலும், ஆய்வுப் பட்டறைகளிலும் பங்குபற்றிய ஆசிரியர், இவ்வாறான நூலின் ஒரு பகுதியை வெளியிடுவது பொருத்தமானதே. அவருக்கு உயர்தர மாணவர்களுக்கு பாடப்புத்தகம் ஒன்றை வெளியிடும் தகுதி உண்டு.

உயர்தர பாடநெறியில் சர்வதேச வர்த்தகம் பற்றிய கோட்பாடு ரீதியான விளக்கம் இந்நூலின் மையக்கருவாக இருப்பதோடு, அதன் நடைமுறை அனுபவங்கள் அட்டவணைகள், வரைபடங்கள் ஊடாக விளக்கப்படுகின்றது. ஏற்றுமதி இறக்குமதிக் கட்டமைப்புக்கள், அதில் ஏற்படும் மாற்றம் போன்றவை இலங்கையை மையமாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது. இது உயர்தர மாணவர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும்.

ஆசிரியர் கருணாகரனால் முன்பு பலமுறை சிறு பிரசுரங்களாக வெளியிடப்பட்டவை மாணவர்களுக்கு நிறைந்த பயனளித்துள்ளது. உயர்தர மாணவர்களின் வினாவிற்கான மாதிரி விடைகள் கூட அவரால் வெளியிடப்பட்டது. அது பல மாணவர்களுக்கு பயன்பட்டது போல் இந்நூலும் மிகப் பயனுடையது. எல்லா உயர்தர மாணவர்களும் இந்நூலைப் பயன்படுத்தி பயனடைய முடியும்.

திரு ப. சிவநாதன்
தலைவர்,
பொருளியற்துறை
யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/330/03514

# முன்னுரை

புதிய பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக தேசிய கல்வி நிறுவனத்தில் (NIE) 1995 ம் ஆண்டு முதல் நடைபெற்ற பொருளியல் கருத்தரங்குகளில் தொடர்ந்து பங்குபற்றியதன் மூலமும், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் பங்குபற்றி வருவதன் மூலமும், ஒரு தசாப்தத்திற்கு மேலாக பொருளியல் பாடத்தை மட்டுமே கற்பித்து வருவதன் மூலமும், பல்வேறு பொருளியல் நூல்களைக் கற்றதன் மூலமும் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் இந்நூலை எழுதியுள்ளேன்.

புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக நடாத்தப்பட்ட கடந்த இரு பரீட்சைகளிலும் அதிகளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட ஒரு பகுதியாகவும், அதே நேரம் பெரும்பாலான மாணவர்களினால் சரியாக விளங்கிக் கொள்ளப்படாத ஒரு பகுதியாகவும் சர்வதேச வர்த்தகம் இருந்துள்ளது. எனவே ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் எளிய முறையில் இந்நூலை வடிவமைத்துள்ளேன்.

இந்நூல் வெளிவருவதற்குப் பலரும் பல வகைகளில் உதவியுள்ளனர். இவ்வகையில் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய எனது ஆசானும், யாழ் பல்கலைக்கழக பொருளியற் துறைத் தலைவருமான திரு ப. சிவநாதன் அவர்களுக்கும், இந்நூலை எழுத ஊக்குவித்த கல்வியியற்துறை விரிவுரையாளர் திரு மா.சின்னத்தம்பி அவர்களுக்கும், வர்த்தக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.வ.க.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், கல்லூரி அதிபர் திரு வி. மாணிக்கம் அவர்களுக்கும், சக ஆசிரிய நண்பர்களுக்கும், சகல வழிகளிலும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய அன்பு மனைவி சயந்தி, மகள் அனிதா, மகன் கோபிகாந்த் ஆகியோருக்கும், அச்சுப் பதிப்பு வேலைகளில் உதவிய கங்கை கொம்பியூட்டர் பிறின்ட் & றோணியோ நிறுவன ஆசிரியர் திரு. வி. தயாபாலன், மற்றும் அதன் பணியாளர் அனைவருக்கும் அட்டையை அழகுற அமைத்துத் தந்த பாரதி பதிப்பகத்தாருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

வே. கருணாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகம்


| | | |
|---|---|---|
| I | வரைவிலக்கணம் | 02 |
| II | தோன்றுவதற்கான காரணங்கள் | 03 |
| III | அடிப்படைக் கோட்பாடுகள் | 05 |
| | அ) முழு நன்மைக் கோட்பாடு | 05 |
| | ஆ) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு | 11 |
| IV | அனுகூலங்கள் | 16 |
| V | பிரதிகூலங்கள் | 17 |
| VI | வர்த்தகப் பாதுகாப்பு | 18 |
| VII | இறக்குமதி தாராளமயமாக்குதல் | 24 |
| VIII | இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு: மாற்றங்கள் - காரணங்கள் | 25 |
| IX | இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு: மாற்றங்கள் - காரணங்கள் | 31 |
| X | இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் முக்கியபண்புகள் (1991 - 1997) | 35 |
| | * கடந்த காலப் பரீட்சை வினாக்கள் | 37 |
| | * பயிற்சி வினாக்கள் | 44 |
| | * பயிற்சி வினாக்கள் விடைகள் | 57 |


## இப்புத்தகத்தைப் பயன்படுத்துவது எப்படி?
## How to use this book

மேற்காட்டிய பத்து உபதலைப்பு விடயங்களை ஒவ்வொன்றாக வாசித்து அவ்வப்போதே இறுதியில் உள்ள அவ் உபதலைப்புக்குரிய கடந்த காலப் பரீட்சை வினாக்கள், பயிற்சி வினாக்களைப் பார்த்து விடை எழுதப் பயிற்சி பெறல் வேண்டும். முக்கிய பயிற்சி வினாக்களுக்கு விடைகள் இறுதியில் வழங்கப்பட்டுள்ளன. விடையளிக்க முடியாதவிடத்து மீண்டும் அவ் உபதலைப்பிலுள்ள விடயங்களை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு உபதலைப்புக்குரிய வினாக்களுக்கு விடையளிக்க முடியுமென்ற நிலை வந்த பின்னரே அடுத்த பகுதியை கற்கத் தொடங்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகம்
# (வெளிநாட்டு வர்த்தகம் / பன்னாட்டு வர்த்தகம்)
# INTERNATIONAL TRADE

## I *வரைவிலக்கணம்*

"ஒருநாடு தனது எல்லைக்கு அப்பால் ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளும் **பொருட்கள் சேவைகளின்** பரிமாற்றம் சர்வதேச வர்த்தகம் எனப்படும்"

✳ குறித்த ஒரு நாடு பொருட்களையும் சேவைகளையும் ஏனைய நாடுகளிலிருந்து **கொள்வனவு** செய்வது **இறக்குமதி வியாபாரம்** எனப்படும்.

✳ குறித்த ஒரு நாடு பொருட்களையும் சேவைகளையும் ஏனைய நாடுகளுக்கு **விற்பனை** செய்வது **ஏற்றுமதி வியாபாரம்** எனப்படும்.

சர்வதேச வர்த்தகம் பிரதானமாக இரு வகைப்படும்.

1) ஏற்றுமதி வியாபாரம்.
2) இறக்குமதி வியாபாரம்.

### உள்நாட்டு வர்த்தகத்துடன் ஒப்பிடுமிடத்து சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் பிரதான வேறுபாடுகள் :

1) நீண்ட தூரம்.
2) ஊழிய அசைவின்மை.
3) மூலதன அசைவின்மை.
4) நாணயங்களை மாற்ற வேண்டியிருத்தல்.
5) அரச கட்டுப்பாடுகள்.
6) நாட்டின் எல்லைகளைக் கடத்தல்.
7) கூடியளவு நிட்சயமற்ற தன்மை.
8) போக்குவரத்துச் செலவும் கஸ்டங்களும்.
9) மொழிகள், வழமைகள், சுவைகள், நிறைகள், அளவைகள் போன்றவற்றிற்கிடையிலான வேறுபாடு-களைக் கவனிக்க வேண்டியிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II சர்வதேசவர்த்தகம் தோன்றுவதற்கான காரணங்கள்

1) நாடுகளிடையே **காரணி வளப்பேறு** (Endowment)
   – **காரணி விலைகள்** வேறுபட்டிருத்தல் (விளக்கம் கீழேயுள்ளது)

2) வினைத்திறனைத் தீர்மானிக்கும்
   – **தொழில் நுட்ப முறைகள்** / பொருட்களின் காரணிச் சேர்க்கை
   – **முகாமைத்துவம்**
   – **மனித மூலதனம்**

   என்பன நாடுகளிடையே வேறுபட்டிருத்தல்.

3) **உற்பத்தியில் அளவுத்திட்டம்** (Returns to scale) நாடுகளிடையே வேறுபட்டிருத்தல்.

4) பொருட்கள் சேவைகளுக்கான தேவைகள் **தெரிவுகள்** நாடுகளிடையே வேறுபட்டிருத்தல்.

5) மேற்கூறப்பட்ட காரணிகளின் விளைவாக (1, 2, 3, 4) நாடுகளிடையே **ஒப்பீட்டுச் செலவு / நயம்** (Comparative Cost / Advantage) வேறுபட்டிருத்தல்.

6) **சிறப்புத் தேர்ச்சியினாலும்** (Specialisation) **பரிமாற்றத்தினாலும்** (Exchange) அடையக்கூடிய அனுகூலங்களைப் பெறல். (விளக்கம் பின்பு)

7) நாடுகளின் **மிகை உற்பத்தி**களை விற்பனை செய்தல்.

8) தமது நாடுகளில் **உற்பத்திச் செலவு கூடிய பொருட்களை** இறக்குமதி செய்தல்.

9) ஒரு நாடு உள்நாட்டில் **உற்பத்தி செய்து கொள்ள முடியாத** பற்றாக்குறையான பொருட்களையும் சேவை களையும் இறக்குமதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரணி வளப்பேறு (Endowment)

"ஒரு நாட்டின் 'காரணி வளப்பேறு' என்பது **சார்பு ரீதியாகக் கிடைக்கக் கூடிய** வேறுபட்ட உற்பத்திக் காரணிகளைக் (வளநிரம்பலை) குறிக்கின்றது".

- சில நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் உழைப்பு மூலதனத்தை விடக் கூடுதலாகவுள்ளது. (ஊழியம் > மூலதனம்).
- சில நாடுகளில் ஒப்பீட்டு ரீதியில் உழைப்பைவிட மூலதனம் உயர்வாகவுள்ளது. (ஊழியம் < மூலதனம்).
- உழைப்புக் கூடுதலாகவுள்ள நாட்டில் உழைப்பு அருமையாகவுள்ள நாட்டைவிட கூலிகள் குறைவாக இருக்கும். இத்தகைய நாடுகளில் **ஊழியச் செறிவான** (Labour intensive) உற்பத்திகளை மலிவாக மேற்கொள்ளலாம்.
- மூலதனம் கூடுதலாகவுள்ள நாட்டில் மூலதனம் அருமையாகவுள்ள நாட்டைவிட வட்டி குறைவாக இருக்கும். இத்தகைய நாடுகளில் **மூலதனச் செறிவான** (Capital intensive) உற்பத்திகளை மலிவாக மேற்கொள்ள முடியும்.
- சர்வதேச வர்த்தகம் பற்றிய ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின் விளக்கம் நாடுகளின் வேறுபட்ட காரணி வளப்பேறு அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்தின் கோலம் (Pattern of intenational trade) தீர்மானிக்கப் படுகின்றதென்பதாகும்.
- உழைப்பு மேலதிகமாகவுள்ள நாடுகள் தொழிற் செறிவான பொருட்களை ஏற்றுமதி செய்து, மூலதனச் செறிவான பொருட்களை இறக்கு செய்யலாம்.

  உ-ம் : இலங்கை தயாரித்த ஆடைகளை ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து, அந்நாட்டிடமிருந்து கணனிகளை (Computers) இறக்குமதி செய்கின்றது.
- அதேபோல மூலதனம் மேலதிகமாகவுள்ள நாடுகள் மூலதனச் செறிவான பொருட்களை ஏற்றுமதி செய்து, ஊழியச் செறிவான பொருட்களை இறக்குமதி செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்:

அ) முழுநன்மைக் கோட்பாடு
(Theory of Absolute Advantage)

ஆ) ஒப்பீட்டு (சார்பு) நயக் கோட்பாடு
(Theory of Comparative Advantage)

### அ) முழுநன்மைக் கோட்பாடு :

* "குறிப்பிட்டளவு வளங்களைக் கொண்டு ஒரு நாடு மற்றைய நாட்டைவிட கூடியளவு குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய வல்லமையைப் பெற்றிருப்பின் அதாவது குறிப்பிட்ட பொருளில் ஓர் அலகைக் **குறைந்த வளங்களைக் கொண்டு** உற்பத்தி செய்யக்கூடிய வல்லமையைப் பெற்றிருப்பின் அப்பொருளுற்பத்தியை மேற்கொள்வதில் முழு நன்மையைக் கொண்டுள்ளது எனலாம்."

* எனவே ஒரு நாடு மற்றைய நாட்டைவிட **செயற்றிறனுள்ள விதத்தில்** (Efficiently) ஒரு பொருளை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருப்பின் அப்பொருளுற்பத்தியை மேற்கொள்வதில் அந்நாடு முழு நன்மையைக் கொண்டுள்ளது எனலாம். அதேநேரம் மற்ற நாட்டில் அப்பொருளுற்பத்தியில் முழுநன்மை அற்ற நிலை காணப்படும்.

முழு நன்மைக் கோட்பாட்டை விளக்கப் பின்வரும் **எடுகோள்கள்** அவசியமாகும் :

1) **உற்பத்திக் காரணிகள்** நாட்டிற்குள்ளே ஒரு தொழிலிருந்து இன்னொரு தொழிலுக்கு பூரண அசையும் தன்மையைக் கொண்டுள்ளன. ஆனால் நாடுகளுக்கிடையே **அசையும் தன்மை** இல்லை.

2) இரு நாடுகளிலும், இருபொருட்களிலும் நிலையான அளவுத் திட்டவிளைவும், நிலையான சராசரிச் செலவும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) இரு நாடுகளிலும் கோதுமை, துணி ஆகிய இரு பொருட்களும் நுகர்வு செய்யப்படுகின்றன.

4) இருநாடுகளிலுமுள்ள பற்றாக்குறையான வளங்கள் முழுமையாகவும், திறமையாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

5) நாடுகளிடையே போக்குவரத்துச் செலவு இல்லை.

6) இறக்குமதிக் கட்டுப்பாடுகளோ, வரிகளோ இல்லை.

உ-ம் : ஓரலகு உள்ளீடுகளைப் பயன்படுத்தி பிரான்சும், இங்கிலாந்தும் கோதுமை, துணி உற்பத்திகளில் ஈடுபடுமாயின் அவ்விரு நாடுகளும் பெற்றுக் கொள்ளத் தக்க உற்பத்தி அளவுகள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|
| கோதுமை (கி.கி.) | 10 | 05 |
| துணி (மீற்றர்) | 06 | 10 |

மேற்காட்டப்பட்ட அட்டவணையின்படி பிரான்ஸ் இங்கிலாந்தை விட அதிகளவு கோதுமையையும் இங்கிலாந்து பிரான்சை விட அதிகளவு துணியையும் உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதனால் பிரான்ஸ் கோதுமையுற்பத்தியிலும், இங்கிலாந்து துணியுற்பத்தி-யிலும் முழுநன்மையைக் கொண்டுள்ளன எனலாம்.

இவ்விரு நாடுகளிலும் தலா 10 அலகு உள்ளீடுகள் இருப்பதாகவும், அவற்றில் அரைப்பங்கினை ஒவ்வொரு நாடும் கோதுமை, துணி ஆகியவற்றின் உற்பத்தியில் பயன்படுத்துவதாகவும் கொண்டால் பெறக்கூடிய உற்பத்தி, நுகர்வு மட்டங்கள் பின்வரும் அட்டவணை, வரைபடங்கள் என்பவற்றின் மூலம் காட்டப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகத்தில் ஈடுபட முன் உற்பத்தி / நுகர்வு

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலகம் |
|---|---|---|---|
| கோதுமை (கி.கி) | 50 | 25 | 75 |
| துணி (மீற்றர்) | 30 | 50 | 80 |

உற்பத்திச் சாத்திய வளையி / அமயச் செலவுக் கோடு




1) **சிறப்புத் தேர்ச்சி மூலமான தன்மை – உற்பத்தி அதிகரிப்பு :**

சர்வதேச வர்த்தகம் நடைபெறும் போது இவ்விரு நாடுகளும் வள ஒதுக்கீட்டை மாற்றித் தாம் முழு நன்மையைக் கொண்டுள்ள பொருளில் சிறப்புத் தேர்ச்சியடைவதன் மூலம் பெறத்தக்க வெளியீட்டு மட்டங்கள் அதிகரித்துள்ளமையை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இங்கு பிரான்ஸ் தன்னிடமுள்ள முழு வளங்களையும் கோதுமை உற்பத்தியிலும், இங்கிலாந்து தன்னிடமுள்ள முழு வளங்களையும் துணியுற்பத்தியிலும் பயன்படுத்துவதாக எடுகோள் கொள்ளப்பட்டுள்ளது)

## சிறப்புத் தேர்ச்சியின் பின் உற்பத்தி

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலகம் |
|---|---|---|---|
| கோதுமை (கி.கி.) | 100 | 00 | 100 |
| துணி (மீற்றர்) | 00 | 100 | 100 |

சிறப்புத் தேர்ச்சியால் உலக உற்பத்தி அதிகரித்துள்ள விதம் :

கோதுமை (100 – 75) = 25 கிலோ கிராம்
துணி (100 – 80) = 20 மீற்றர்

2) **பரிமாற்றத்தின் (வர்த்தகத்தின்) மூலமான நன்மை - நுகர்வு மட்டம் அதிகரிப்பு :**


ஏற்கனவே கூறப்பட்ட உதாரணத்தின் படி பிரான்சின் 50 கிலோகிராம் கோதுமைக்காக இங்கிலாந்தின் 50 மீற்றர் துணி பரிமாற்றம் செய்யப்பட்டதாகக் கொள்வோம். இப் பரிமாற்றத்தின் மூலம் இரு நாடுகளிலும் நுகர்வு மட்டம் அதிகரித்திருப்பதை பின்வரும் அட்டவணை வரைபடம் என்பன விளக்குகின்றன.

## வர்த்தகத்தில் ஈடுபட்ட பின் நுகர்வு மட்டம்

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலகம் |
|---|---|---|---|
| கோதுமை (கி.கி.) | 50 | 50 | 100 |
| துணி (மீற்றர்) | 50 | 50 | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**உற்பத்திச் சாத்திய வளையி / அமையச் செலவுக் கோடு**

**வர்த்தகத்தின் முன் :**

புள்ளி A - பிரான்சின் உற்பத்தி / நுகர்வு
புள்ளி B - இங்கிலாந்தின் உற்பத்தி / நுகர்வு

**வர்த்தகத்தின் பின் :**

புள்ளி C - பிரான்சின் உற்பத்தி
புள்ளி E - இங்கிலாந்தின் உற்பத்தி
CF - பிரான்ஸ் ஏற்றுமதி / இங்கிலாந்து இறக்குமதி
GE - இங்கிலாந்தின் ஏற்றுமதி / பிரான்சின் இறக்குமதி
AH - பிரான்ஸ் (துணி) நுகர்வு அதிகரிப்பு
BH - இங்கிலாந்து (கோதுமை) நுகர்வு அதிகரிப்பு

இங்கு பிரான்ஸ் கோதுமை ஏற்றுமதி 50 அலகுகள் (CF) இங்கிலாந்திற்கு
இங்கிலாந்தின் துணி ஏற்றுமதி 50 அலகுகள் (GE) பிரான்ஸ்ற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பரிமாற்றத்தின் மூலம் நுகர்வு அதிகரித்துள்ள விதம் :*

பிரான்சின் துணி நுகர்வு (50 – 30) = 20 மீற்றர்.
இங்கிலாந்தின் கோதுமை நுகர்வு (50 – 25) = 25 கிலோகிராம்.

இதன்படி முழுநன்மையின் அடிப்படையில் உற்பத்தியை மேற்கொண்டு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதனால் உலக நாடுகள் தமது **உற்பத்திச் சாத்திய வளையிக்கு வெளியேயுள்ள புள்ளியில் நுகர்வு மட்டமொன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம்** என்பது பெறப்படுகின்றது.

**முழுநயக் கோட்பாட்டிலுள்ள குறைபாடு :**

முழுநன்மைக் கோட்பாட்டை விளக்கிய **அடம்சிமித்** (Adam Smith) இரு நாடுகளிடையே வர்த்தகம் ஏற்படுவதற்கு முழுநன்மை அவசியமானது என்று குறிப்பிட்டார். இக்கருத்தினடிப்படையில் நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடவேண்டுமாயின் இன்றைய நிலையில் பெரும்பாலான வளர்முகநாடுகள் எந்தஒரு பொருளையும் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை இருக்கும். காரணம் வளர்ச்சியடைந்த நாடுகளே பெரும்பாலான பொருட்களில் முழுநன்மையினை அனுபவிக்கின்றன. **பெரும்பாலான வளர்முக நாடுகள் எந்த ஒரு பொருளிலும் முழுநன்மையை அனுபவிப்பதில்லை.**

முழுநயத்தை அனுபவிக்காவிடினும் இன்று எல்லா நாடுகளும் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. இந்நடைமுறை உண்மையை அடிப்படையாக வைத்து "இரு நாடுகளும் சாதகமான முறையில் **வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு முழுநன்மையானது அவசியமான ஒரு நிபந்தனையன்று. ஒப்பீட்டு நன்மையே போதுமானது**" என்ற கருத்தை டேவிற் றிக்காடோ (David Ricardo) என்பவர் முன்வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு ("ஒப்பீட்டு நயம் / அனுகூலம், ஒப்பீட்டுச் செலவு")

"மற்ற நாட்டிலும் பார்க்க **குறைந்த அமையச் செலவில்** ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கான ஒரு நாட்டின் ஆற்றலே ஒப்பீட்டு நன்மையாகும்". அதாவது "மற்ற நாட்டை விட ஒப்பீட்டு ரீதியில் **செயற்றிறனுடன்** பொருளை உற்பத்தி செய்வதற்கான ஒரு நாட்டின் ஆற்றலே ஒப்பீட்டு நன்மையாகும்" எனலாம். இங்கு "மிகவுயர்ந்த செயற்றிறன்" "மிகக் குறைந்த செயற்றிறனின்மை" ஆகிய எண்ணக் கருக்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**ஒப்பீட்டு நன்மையைத் தீர்மானிக்கும் காரணிகள் :**

1) நாடுகளிடையே வளநிரம்பல் / காரணி வளப்பேறு (Endowment) காரணி விலைகள் வேறுபட்டிருத்தல்.

2) நாடுகளிடையே வினைத்திறனைத் தீர்மானிக்கும்.
   - **தொழில்நுட்ப முறைகள்** : பொருட்களின் காரணிச் சேர்க்கை.
   - **முகாமைத்துவம் :**
   - **மனித மூலதனம் :**

   என்பன வேறுபட்டிருத்தல்.

3) நாடுகளிடையே **உற்பத்தி அளவுத்திட்டம்** வேறுபட்டு இருத்தல்.
   - குறிப்பிட்ட சில உற்பத்திகளில் அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவு காணப்படும்.
   - வேறு சில உற்பத்திகளில் குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு காணப்படும்.

4) நாடுகளிடையே பொருட்கள், சேவைகளுக்கான **தேவைகள், தெரிவுகள்** வேறுபட்டிருத்தல். (முழுநயக் கோட்பாட்டிற்கு பயன்படுத்திய எடுகோள்கள் இவற்றிற்கும் பொருந்தும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரலகு உள்ளீடுகளைக் கொண்டு பிரான்சும், இங்கிலாந்தும் உற்பத்தி செய்யக் கூடிய கோதுமை, துணி என்பவற்றின் அளவுகளும், அவற்றின் அமையச் செலவும் பின்வரும் அட்டவணையில் தரப்படுகின்றன.

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|
| கோதுமை (கி.கிராமில்) | 20 | 10 |
| துணி (மீற்றரில்) | 10 | 08 |
| 1 கி.கி கோதுமைக்கான அமயச் செலவு (துணி மீற்றரில்) | 0.5 | 0.8 |
| 1 மீற்றர் துணிக்கான அமயச் செலவு (கோதுமை கி.கிராமில்) | 02 | 1.25 |

இவ் அட்டவணையின் படி,

* **பிரான்சுக்கு கோதுமை** உற்பத்தியில் **குறைந்த** அமயச் செலவு அதாவது **அதிகளவு செயற்றிறன்** காணப் படுகிறது. இதனால் பிரான்சுக்கு கோதுமையுற்பத்தியில் **ஒப்பீட்டு** நன்மை காணப்படுகின்றது.

* **இங்கிலாந்திற்கு துணியுற்பத்தியில் குறைந்த** அமயச் **செலவு** அதாவது **அதிகளவு செயற்றிறன்** காணப்படுகிறது. எனவே துணி உற்பத்தியில் இங்கிலாந்திற்கு **குறைந்த செயற்றிறனின்மை** காணப் படுகிறது. இதனால் இங்கிலாந்துக்கு துணியுற்பத்தியில் **ஒப்பீட்டு நன்மை** உள்ளதெனலாம்.

இவ்விரு நாடுகளிலும் தலா 10 அலகு உள்ளீடுகள் இருப்பதாகவும் அவற்றில் அரைப் பங்கினை ஒவ்வொரு நாடும் கோதுமை, துணி ஆகியவற்றின் உற்பத்தியில் பயன்படுத்துவதாகவும் கொண்டால் பெறக்கூடிய உற்பத்தி / நுகர்வு மட்டங்கள் பின்வரும் அட்டவணை, வரைபடம் என்பவற்றின் மூலம் காட்டப் படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகத்தில் ஈடுபடமுன் உற்பத்தி / நுகர்வு

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலகம் |
|---|---|---|---|
| கோதுமை (கி.கிராம்) | 100 | 50 | 150 |
| துணி (மீற்றர்) | 50 | 40 | 90 |

## உற்பத்திச் சாத்திய வளையி / அமையச் செலவுக் கோடு




1) **சிறப்புத் தேர்ச்சி மூலமான நன்மை - உற்பத்தி அதிகரிப்பு :**

சர்வதேச வர்த்தகம் நடைபெறும்போது இவ்விரு நாடுகளும் வள ஒதுக்கீட்டை மாற்றி ஒப்பீட்டு நன்மையைக் கொண்டுள்ள பொருளில் சிறக்குமியல்பை அடைவதன் மூலம், பெறத்தக்க வெளியீட்டு மட்டங்கள் அதிகரித்துள்ளமையைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இங்கு பிரான்ஸ் தன்னிடமுள்ள வளங்களில் 80 சத வீதத்தை கோதுமை உற்பத்திக்காகவும் பயன்படுத்துகின்றது எனவும், இங்கிலாந்து தனது வளங்கள் முழுவதையும் துணியுற்பத்தியிலும் பயன்படுத்துவதாக எடுகோள் கொள்ளப்பட்டுள்ளது.)

## சிறப்புத் தேர்ச்சியின் பின் உற்பத்தி

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலகம் |
|---|---|---|---|
| கோதுமை (கி.கிராம்) | 160 | 00 | 160 |
| துணி (மீற்றர்) | 20 | 80 | 100 |

சிறப்புத் தேர்ச்சியால் உலக உற்பத்தி அதிகரித்துள்ள விதம் :

கோதுமை (160 – 150) = 10 கி. கிராம்
துணி (100 – 90) = 10 மீற்றர்

2) **பரிமாற்றத்தின் (வர்த்தகத்தின்) மூலமான நன்மை - நுகர்வு மட்டம் அதிகரிப்பு :**

ஏற்கனவே கூறப்பட்ட உதாரணத்தின்படி பிரான்சின் 50 கிலோகிராம் கோதுமைக்காக இங்கிலாந்தின் 35 மீற்றர் துணி பரிமாற்றம் செய்யப்பட்டதாகக் கொள்வோம். இப் பரிமாற்றத்தின் மூலம் இரு நாடுகளிலும் நுகர்வு மட்டம் அதிகரித்திருப்பதை பின்வரும் அட்டவணை வரைபடம் என்பன விளக்குகின்றன.


## வர்த்தகத்தில் ஈடுபட்ட பின் நுகர்வு மட்டம்

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலகம் |
|---|---|---|---|
| கோதுமை (கி.கிராம்) | 110 | 50 | 160 |
| துணி (மீற்றர்) | 55 | 45 | 100 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ்




## இங்கிலாந்து




பரிமாற்றத்தின் மூலம் **நுகர்வு அதிகரித்துள்ள விதம்**

| | | | |
|---|---|---|---|
| பிரான்ஸ் | கோதுமை | = | 10 கி. கிராம் |
| | துணி | = | 5 மீற்றர் |
| இங்கிலாந்து : | துணி | = | 5 மீற்றர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின் அடிப்படையிலும் உற்பத்தியை மேற்கொண்டு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதனால் **உலக நாடுகள் தமது உற்பத்திச் சாத்திய வளையிக்கு வெளியேயுள்ள புள்ளியில் நுகர்வு மட்டமொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியும்** என்பது பெறப்படுகின்றது. (வர்த்தகச் சாத்தியமான வளையி உ.சா. வளையிக்கு வலப்புறமாக அமையும்)

குறிப்பு : உ.சா. வளையியின் **வடிவம் / சரிவு** ஒத்த தன்மையுடைய நாடுகளிடையே வர்த்தகம் இடம்பெற மாட்டாது. காரணம் அவற்றின் அமயச் செலவு விகிதங்கள் ஒரே மாதிரியானவையாகும். எனவே வர்த்தகத்தினால் அவை நன்மையடைய முடியாது.

**வர்த்தகத்தினால் நன்மை பெறுவது தடுக்கப்படும் நிலைமைகள் :**

1) எல்லா நாடுகளிலும் எல்லாப் பொருட்களுக்குமான அமயச் செலவு சமமாக இருத்தல்.
2) அமயச் செலவு வேறுபாட்டை விட போக்குவரத்துச் செலவு அல்லது இறக்குமதித் தீர்வை உயர்வாக இருத்தல்.
3) அமையச் செலவு வேறுபாட்டை கோட்டா முறை அல்லது தீர்வைபற்ற தடைகள் இல்லாமல் செய்தல்.

## *IV சர்வதேசவர்த்தகத்தின் அனுகூலங்கள் / நன்மைகள்*

1) தொழிற்பிரிப்பு, சிறப்புத் **தேர்ச்சி** மூலம் உலக **உற்பத்தி மட்டம் அதிகரித்தல்** (விளக்கம் முன்பு தரப்பட்டது)
2) **பரிமாற்றத்தின் மூலம்** ஒரு நாடு தனது உற்பத்தி இயலளவினும் **கூடிய** மட்டமொன்றில் **நுகர்வு** செய்ய முடிதல். (விளக்கம் முன்பு தரப்பட்டது)
3) பேரளவு உற்பத்தி தொழிற்பிரிப்பு தேர்ச்சி மூலம் உற்பத்தியில் **அளவுத்திட்டச் சிக்கனங்கள்** ஏற்படல் - செலவு குறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) போட்டி காரணமாகவும், தொழில் நுட்பத் தொடர்புகள் காரணமாகவும் பண்டங்களின் **தரம்** அதிகரிக்கும்.
5) நாடுகள் **மிகை உற்பத்திகளை** விற்பனை செய்தல்.
6) தமது நாடுகளில் **உற்பத்திச் செலவு கூடிய பண்டங்களைக்** குறைந்த விலையில் இறக்குமதி செய்தல்.
7) நமது நாடுகளில் உற்பத்தி செய்ய முடியாத பொருட்களை இறக்குமதி செய்தல் - இதன் **மூலம் பல்வேறு விதமான பண்டங்களை** நுகர வாய்ப்பு ஏற்படுதல். வாழ்க்கைத் தரம் அதிகரித்தல்.
8) உற்பத்தியில் **பயன்படுத்தப்படாத சாதனங்களை** உற்பத்தியில் ஈடுபடுத்த முடிதல்.
9) உற்பத்தி / வருமானம் அதிகரித்து பொருளாதாரங்கள் **அபிவிருத்தி** அடையப்படலாம். **வளர்ச்சிக்கான** இயந்திர -மாக (An Engine of Growth) சர்வதேச வர்த்தகம் பயன்படுத்தப்படுகிறது.
10) நாடுகளுக்கிடையிலான **அரசியல் பொருளாதாரத் தொடர்புகள்** வலுப்பெறும்.

## V சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்கள் / தீமைகள்

1) **உள்நாட்டு உற்பத்தி** பாதிக்கப்படலாம். குழந்தைப் பருவத்திற்குரிய **தொழில்கள்** (Infant Industries / Sunrise Industries) பாதிக்கப்படலாம்.
2) **வீழ்ச்சியடைந்து செல்லும் தொழில்கள்** / சூரிய அஸ்தமனத் தொழில்கள் (Declining Industries / Sun set Industries) விரைவாக வீழ்ச்சியடைய நேரிடுவதால் **வேலையின்மை** அதிகரிக்கலாம்.
3) வெளிநாடுகளில் **தங்கியிருத்தலினால்** ஏற்படும் பாதிப்புக்கள் உலக சந்தையில் ஏற்றுமதி விலைகள் வீழ்ச்சியடையும் போதும், இறக்குமதி விலைகள் அதிகரிக்கும் போதும் பொருளாதாரம் பாதிக்கப்படும். சென்மதி நிலுவை, நாணய மாற்றுவீதம், விலைமட்டம், உற்பத்தி மட்டம், தொழில் மட்டம் என்பன பாதிக்கப் படலாம். ஆயுதம், உணவு போன்றன யுத்த / இடர் நிலைமைகளில் பெற முடியாத நிலை தோன்றலாம்.
4) **உள்நாட்டுச்** சந்தைத் **தேவைகளுக்கான** உற்பத்தி-களுக்கு ஊக்குவிப்பு குறையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) வெளிநாட்டு உற்பத்தியாளர் **குவித்தலில்** (Dumping) ஈடுபடலாம். அதாவது தமது நாட்டில் விற்கும் விலையிலும், சில வேளைகளில் சராசரிச் செலவிலும் குறைத்தும் உள்நாட்டிற்குள் பொருட்களை வழங்கலாம்.

6) நாடுகள் பிறநாடுகளால் **சுரண்டப்படலாம்.** சர்வதேச வர்த்தகமானது நவகாலனித்துவத்தின் கருவியாகக் கொள்ளப் படுவதுண்டு.

7) **பொருத்தமற்ற தொழில் நுட்பங்கள்** நாட்டிற்குள் வருவதால்,
   - வேலையின்மை
   - எரிபொருள் பிரச்சனை
   - சூழல் மாசடைதல் பிரச்சனை

   போன்றன தோன்றலாம்.

8) மக்களுக்கு **அவசியமில்லாத பண்டங்கள்** இறக்குமதி செய்யப்படுவதால் நுகர்வுச் செலவீடு அதிகரிக்கும் → சேமிப்பு குறையும் → முதலீடு குறையும் → கடன் பெறும் நிலை உருவாகும்.

## *VI சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பு (Protection on Trade)*

"உள்நாட்டுக் கைத்தொழில்களை **வெளிநாட்டுப் போட்டி உற்பத்தியாளர்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக எடுக்கப் படும் நடவடிக்கைகள்** சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பு எனப்படும்."

பாதுகாப்பிற்கான காரணங்கள் / ஆதரவான வாதங்கள். (சர்வதேச வர்த்தகத்தில் அரசு தலையிடுவதற்கான காரணங்கள்) :

1) **இளம் பருவத்தொழில்களைப்** பாதுகாத்தல். (விளக்கம் கீழே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

2) இலாபகரமான வெளிநாட்டு ஊழியத்திலிருந்து **உள்நாட்டு ஊழியத்தைப்** பாதுகாத்தல்.

- குறைந்த ஊழியச் செலவுடைய வெளிநாட்டு உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தைக்குள் வருவதால் உள்நாட்டு உற்பத்தியாளருக்கான சந்தை வாய்ப்புக்கள் இல்லாமல் போகும். இதனால் உள்நாட்டு ஊழியர்களின் தொழில் வாய்ப்பு இழக்கப்படலாம்.

3) **சென்மதி நிலுவைப் பிரச்சனைகளுக்கு தீர்வு** காணுதல். அதற்காக உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவித்து ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களூடாக வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்கும், இறக்குமதிச் செலவைக் குறைப்பதற்கும் அரச தலையீடுகள் அவசியம்.

4) தெரிவு செய்த **ஏற்றுமதி, இறக்குமதி**களைக் கட்டுப் படுத்தல். உ-ம் : போதை வஸ்துப் பொருள், தரமற்ற பொருட்கள்.

5) **தன்னிறைவை** (Self Reliance) ஊக்குவித்தலும் வெளிநாடுகளில் தங்கியிருத்தலைக் குறைத்தலும்.

6) **விலைகளைக் கட்டுப்படுத்துதல்** - உ-ம் : ஏற்றுமதிப் பொருட்கள் மீது வரி விதித்தல், நாணய மாற்று வீதத்தை உயர்த்துதல்.

7) இறுப்புக்கள் மூலமாக **வருமானம்** பெறுதல்.

8) **குவித்தலை** (Dumping) தடுத்தல்.

9) **பொருளாதார உறுதி** பேணுதல் - உள்நாட்டு விலை மட்டத்தையும், நாணய மாற்று வீதத்தையும் உறுதி-யாகப் பேணுவதன் மூலம் நாணயத்தின் உள்நாட்டு வெளிநாட்டுப் பெறுமதிகளைப் பாதுகாத்தல்.

10) **மேலதிக சிறப்புத் தேர்ச்சி**யால் (Over specialisation) உண்டாகக் கூடிய **ஆபத்துக்களைத்** தவிர்த்தல் - அளவுத் திட்டச் சிக்கனமின்மை (Diseconomies of Scale) தோன்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் : விவசாயத் துறையில் மேலதிக சிறப்புத் தேர்ச்சியால் மண்ணரிப்பு, கிருமிநாசினி பாவனை போன்றன எதிர்கால வருமானத்தைப் பாதிப்பனவாகும்.

11) **அரசியல் ரீதியிலான**

அ) பொருளாதாரத் தடைகள் (Economic Sanctions) மூலம் நாடுகளில் அரசியல் தீர்மானங்களை மாற்றுதல்.

ஆ) போர் நிலைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்த்தல்.

## குழந்தைப் பருவத் தொழில்களுக்குப் பாதுகாப்பு (Protection of Infant Industries)

புதிய கைத்தொழில்கள் / இளம் பருவக் கைத்தொழில்கள் தமது **ஆரம்பக் கட்டங்களில்** இறக்குமதிப் பொருட்களுடன் போட்டியிடுவதில் பல **சிக்கல்களை** எதிர்நோக்கும். இறக்குமதிகளுடன் ஒப்பிடும் போது,

* அளவுத் திட்டச் **சிக்கனமின்மைகள்** காரணமாக **உற்பத்திச் செலவுகள் உயர்வாகவும்,**

* **உற்பத்தித் தரம்** குறைவாகவும் காணப்படும். எனவே இறக்குமதிப் பொருட்களுடன் இவற்றினால் போட்டி போட முடியாது.

எனவே இத்தகைய தொழில்கள் அளவுத் திட்டச் சிக்கனங்களைப் பேணி உற்பத்திச் செலவைக் குறைக்கவும், தமது தரத்தை அதிகரித்துக் கொள்ளவும், இவற்றுக்கு இறுப்புக்கள் (Tarrifs) மூலமும், இறக்குமதித் தடை, கோட்டா முறை ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப்பத்திரம் செலவணிக் கட்டுப்பாடுகள் போன்ற **இறுப்பு சாராத தடைகள்** மூலமும் **தற்காலிக பாதுகாப்பு** வழங்கப்பட வேண்டும்.

* **காரணி வளப்பேறு,** அதன் அடிப்படையிலான **ஒப்பீட்டு நலன்** என்பவற்றுக்கேற்ப பொருத்தமான **தொழில்கள்** தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு மட்டுமே இத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* இத்தகைய ஆரம்ப கட்டங்களில் அளிக்கப்படும் பாதுகாப்பு **குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக-மாகவே** வழங்கப்படல் வேண்டும். அத்தொழில் **முதிர்ச்சியடையும்** பொழுது தமது **அனுபவத்தின் மூலம்** - உற்பத்திச் செலவைக் குறைக்கவும்,
  - உற்பத்தித் தரத்தை உயர்த்தவும் ஆற்றல் பெறுதல் வேண்டும். இதன் மூலம் இறக்குமதி-களுடன் போட்டியிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இதனையே **செயற்திறன் வாய்ந்த பாதுகாப்பு** (Effective Protection) எனலாம்.

* **நீண்ட காலத்திற்கு** இப்பாதுகாப்பு தொடர்ச்சியாக வழங்கப்படுமாயின் **திறனற்ற தொழில்களும்** நிலைத்து நிற்க வழிவகுத்து விடும். எனவே செயற்திறன் வாய்ந்த பாதுகாப்பே வழங்கப்பட வேண்டும்.

## பாதுகாக்கும் முறைகள் :
## (Methods of Protection)

இரு வகையாக நோக்கலாம்.

அ) இறுப்புக்கள் / சுங்கத் தீர்வைகள் (Tarrifs / Customs Duties)

ஆ) இறுப்பு சாராத தடைகள்

1) இறக்குமதித் தடைகள் (Embargoes)
2) அனுமதிப் பங்கு / கோட்டா (Quotas)
3) நிருவாகக் கட்டுப்பாடுகள் (Administrative restrictions)
4) செலாவணிக் கட்டுப்பாடு (Exchange Control)
5) தன்னிச்சையான உடன்படிக்கைகள் (Voluntary agreements)
6) இறக்குமதி வைப்புத் திட்டம் (Import Deposit Schemes)
7) சுகாதாரப் பாதுகாப்பு பற்றிய விதிகள் / நியதிகள்
8) மானியங்கள் (Subsidies)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுங்கத் தீர்வைக்கும் (Customs duties) கலால் தீர்வைக்கும் (Excise duties) இடையிலான பிரதான வேறுபாடுகள் :**

* சுங்கத் தீர்வைகள் இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் அதேநேரம் **உள்நாட்டுப் பொருட்கள் மீது** விதிக்கப்படுவதில்லை.
  - ஆனால் கலால் தீர்வைகள் உள்நாட்டுப் பொருட்கள் மீதும், இறக்குமதிப் பொருட்கள் மீதும் விதிக்கப்படும்.
* சுங்கத் தீர்வைகள் பாதுகாப்புத் தன்மை கொண்டவை.
  - ஆனால் கலால் தீர்வைகள் வருமான நோக்குடையவை.

***இறக்குமதி இறுப்புக்களின் மூலம் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாத்தல் :***

பின்வரும் 2 வழிகளில் இறக்குமதி இறுப்புக்களை கையாள்வதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாக்கலாம்.

1) உள்நாட்டில் உற்பத்தி **செய்யக்கூடிய** பொருட்களின் இறக்குமதித் தீர்வைகளை விதித்தல் உயர்த்துதல்.
2) உள்நாட்டு (இறக்குமதிப் பதிலீட்டு) உற்பத்தியில் கையாளப்படும் **உள்ளீடுகள், முதற்பொருட்கள்** என்பவற்றின் மீதான இறக்குமதித் தீர்வைகளைக் குறைத்தல் / அகற்றுதல்.
   இவற்றின் மூலமாக உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் **செயற்திறன்** மிக்க பாதுகாப்பினை அதிகரிக்கலாம்.

***பாதுகாப்புக்கு எதிரான வாதங்கள் :***

* சர்வதேச **வர்த்தகத்தினால் ஏற்படும் நன்மைகளை** இல்லாமல் செய்துவிடும் (விளக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வர்த்தகத் தடைகள் **ஏழை நாடுகளின் செலவில் / பாதிப்பில்** குறுங்கால அனுகூலங்களை மட்டுமே தருகின்றன.

* பாதுகாப்பு வழங்கப்படுவது **நீண்ட கால நலன்களில் இழப்பை** (Long – term welfare loss) ஏற்படுத்தும். எனவே பொருத்தமான தொழில்களைத் தெரிந்து, தற்காலிகமாக மட்டுமே பாதுகாப்பு வழங்கப் பட வேண்டும். அதுவே செயற்றிறன் வாய்ந்த பாதுகாப்பாகும்.

***அபிவிருத்தியடைந்த நாடுகளின் சந்தையில் நிலவும் பாதுகாக்கும் நோக்குடைய போக்குகள் காரணமாக மூன்றாம் உலக நாடுகளின் கைத்தொழில் ஏற்றுமதிகளின் விரிவாக்கம் பாதிக்கப்படுதல்.***

மூன்றாம் உலக நாடுகள் **ஊழியச் செறிவுள்ள** பொருட்களை உற்பத்தி செய்து குறைந்த விலையில் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும். இந்த **மலிவான ஏற்றுமதிகள்** அபிவிருத்தியடைந்த நாடுகளின் ஊழியச் செறிவுள்ள தொழில்களோடு போட்டியிடுகின்றன. அங்கு கூலிகள் சார்பளவில் உயர்வு எனவே உற்பத்திச் செலவுகள் உயர்வாக உள்ளன.

எனவே அபிவிருத்தியடைந்த நாடுகளின் அரசாங்கங்கள் தமது உள்நாட்டு தொழில்களைப் பாதுகாக்கும் பொருட்டு மூன்றாம் உலக நாடுகளின் **மலிந்த இறக்குமதிகளுக்கு உயர்ந்த இறுப்புக்கள், இறக்குமதிக் கோட்டாக்கள்** என்பவற்றை விதிக்கின்றன. அதாவது அபிவிருத்தியடைந்த நாடுகளின் உள்நாட்டுத் தொழில்களோடு போட்டியிடும் மூன்றாம் உலக நாடுகளுக்கு எதிராக அந்நாடுகள் தடைகளை விதிக்கின்றன. இதனால் மூன்றாம் உலக நாடுகளின் கைத்தொழில் ஏற்றுமதிகளின் விரிவாக்கம் பாதிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VII இறக்குமதி தாராளமாக்கல்.

"இறக்குமதிக் கட்டுப்பாடு / தடை, அளவுக் கட்டுப்பாடுகள் (கோட்டா முறை) போன்ற **நேரடிக் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி,** நடைமுறையில் உள்ள **இறக்குமதித் தீர்வைகளுக்குட்பட்டு** பொருட்கள் சேவைகளை இறக்குமதி செய்ய அனுமதித்தலே இறக்குமதித் தாராள மயமாக்கல் ஆகும்."

உ-ம் : 1977 ஆம் ஆண்டின் பின் இலங்கையில் இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டது.

### *இதன் அனுகூலங்கள் :*

1) பற்றாக்குறையான பொருட்களைப் பெற முடிதல்.
   - நீண்ட வரிசை முறை, பதுக்கல், கறுப்புச் சந்தை என்பன நீங்கும்.
2) முதலீட்டுப் பொருட்களும் மூலப் பொருட்களும் இறக்குமதி செய்யப்படுவதால் கைத்தொழில்துறை வளர்ச்சியடையலாம்.
3) வர்த்தகமும் அதன் துணைச் சேவைகளும் வளர்ச்சி-யடையலாம்.
4) இவற்றின் வளர்ச்சியினால் தொழில் வாய்ப்புப் பெருகலாம்.
5) தொழில்துறை நவீனமயப் படுத்தப்படும்.
   - இதனால் உற்பத்தித் திறன் அதிகரிக்கும். உற்பத்தி பெருகும்.
6) தரமான பொருட்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.
7) பல பொருட்களை நுகரும் வாய்ப்பு உருவாகும்.

### *பிரதிகூலங்கள் :*

1) உள்நாட்டு உற்பத்திகள் பாதிப்படையலாம்.
2) இறக்குமதிச் செலவு கூடி சென்மதி நிலுவைப் பிரச்சனை தோன்றலாம்.
3) வெளிநாட்டுக் கடன் சுமை அதிகரிக்கலாம்.
4) நாணயம் தளம்பலிடப்பட்டிருப்பின் நாணயத்தின் வெளிப் பெறுமதி தேய்வடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) பொருத்தமற்ற தொழில்நுட்பம் நாட்டிற்குள் இறக்குமதி மூலம் கொண்டு வரப்படுவதால் - வேலையின்மை, எரிபொருள் பிரச்சனை, சூழல் மாசடைதல் போன்ற பிரச்சனைகள் தோன்றலாம்.

## VIII இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு

"ஒரு நாட்டின் மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் ஒவ்வொரு வகையான ஏற்றுமதிப் பொருளும் கொண்டிருக்கும் சதவீதப் பங்களிப்பை எடுத்துக் கூறுவது ஏற்றுமதிக் கட்டமைப்பாகும்".

இலங்கையைப் பொறுத்த வரை மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் விவசாய ஏற்றுமதி, கைத்தொழில் ஏற்றுமதி, கனிப்பொருள் ஏற்றுமதி என்பவற்றின் சதவீதப் பங்கை எடுத்துக் கூறுதல் ஏற்றுமதிக் கட்டமைப்பாகும்.

### இலங்கையின் ஏற்றுமதியமைப்பு 1997

| ஏற்றுமதிகளின் வகை | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் |
|---|---|
| 1) விவசாய ஏற்றுமதிகள் | 23 |
| அ) தேயிலை | 16 |
| ஆ) இறப்பர் | 02 |
| இ) தெங்கு | 02 |
| ஈ) சிறு விவசாய ஏற்றுமதிகள் | 03 |
| 2) கைத்தொழில் ஏற்றுமதிகள் | 74 |
| அ) புடவைகளும் ஆடைகளும் | 49 |
| ஆ) பெற்றோலிய உற்பத்திகள் | 03 |
| இ) ஏனையவை | 22 |
| 3) கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 02 |
| அ) இரத்தினக்கற்கள் | 02 |
| ஆ) ஏனையவை | -- |
| 4) வகைப்படுத்தப் படாதவை | 01 |
| மொத்தம் 1 + 2 + 3 + 4 | 100 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

குறிப்பிட்ட கால இடைவெளியில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி பெறுமதியில் விவசாய ஏற்றுமதி, கைத்தொழில் ஏற்றுமதி, கனிப்பொருள் ஏற்றுமதி என்பன கொண்டுள்ள சதவீதப் பங்கில் ஏற்படும் மாற்றங்கள் ஏற்றுமதிக் கட்டமைப்பு மாற்றங்கள் ஆகும்.

| வகை | மொத்த ஏற்றுமதியின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 1977 | 1987 | 1997 |
| 1) விவசாய ஏற்றுமதிகள் | 80 | 42 | 23 |
| தேயிலை | 53 | 26 | 16 |
| 2) கைத்தொழில் ஏற்றுமதி | 14 | 49 | 74 |
| புடவை, ஆடைகள் | 02 | 31 | 49 |
| 3) கனிப்பொருட்கள் | 05 | 04 | 02 |
| 4) ஏனையவை | 01 | 05 | 01 |
| மொத்தம் 1 + 2 + 3 + 4 | 100 | 100 | 100 |

1) விவசாய ஏற்றுமதிகளின் சார்பு ரீதியான பங்களிப்பு குறைவடைந்துள்ளது. (தரவுகள்)
2) கைத்தொழில் ஏற்றுமதிகளின் சார்பு ரீதியான பங்களிப்பு அதிகரித்துள்ளது (தரவுகள்)
3) ஏற்றுமதியில் தைக்கப்பட்ட ஆடைகள் முக்கிய இடம் பிடித்துள்ளன (தரவுகள்)
   - கைத்தொழில் ஏற்றுமதி வருமானத்தில் சுமார் 60% ஆடைகளின் ஏற்றுமதி மூலம் பெறப்பட்டது.
4) மொத்த ஏற்றுமதி வருமானத்தில் தேயிலையின் சார்பளவு பங்களிப்பு குறைவடைந்துள்ளது (தரவுகள்)

**கருத்துரை :**

❀ ***ஏற்றுமதிக் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகள் :***

1) ஒப்பீட்டு ரீதியில் கைத்தொழில் துறையின் முதலீடுகள் அதிகரித்து, விவசாயத் துறையின் முதலீடுகள் குறைந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) கைத்தொழில் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் - 1977 ஆம் ஆண்டின் பின்னர் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கையாக மாற்றப்பட்டமை.

3) ஏற்றுமதி நோக்குடைய தனியார் கைத்தொழில்களுக்கு ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டமை மானியம், வரிச்சலுகை, வரி விடுதலை, கடன்வசதி போன்றன வழங்கப்பட்டமை.

4) சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்டமை.

5) வெளிநாட்டு முதலீடுகள் உள்நாட்டில் அனுமதிக்கப் பட்டமை.

6) இறக்குமதித் தடைகள் நீக்கப்பட்டு தாராள வர்த்தகக் கொள்கைகள் கடைப்பிடிக்கப் பட்டமையால் கைத்தொழிலுக்கு வேண்டிய முதல் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் பெற முடிந்தமை.

7) ஏற்றுமதிக் கிராமங்கள், 2000 ஆடைத் தொழிற் சாலை அமைக்கும் திட்டம் போன்றவற்றால் கைத்தொழில் வளர்ச்சியடைந்தமை.

8) விவசாய ஏற்றுமதிகளை விட கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான சந்தை வாய்ப்பு அதிகமாகக் காணப்படல்.

9) விவசாயப் பொருட்களின் விலைகளை விட கைத்தொழில் பொருட்களின் விலைகள் பெருமளவால் அதிகரித்தமை.

❀ ***விவசாய கைத்தொழில் ஏற்றுமதிகள் பற்றிய ஒப்பீடு :***

மொத்த ஏற்றுமதிப் பெறுமதியின் அடிப்படையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் முக்கியத்துவம் பெற்ற போதும் **தேறிய ஏற்றுமதி வருமானத்தின் அடிப்படையில் விவசாயப் பொருட்களே முக்கியத்துவம் பெற்றவையாகக்** காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| தேறிய ஏற்றுமதி வருமானம் (தேறிய அந்நிய செலாவணி வருமானம் (உள்நாட்டில் கூட்டிய பெறுமதி) | = | மொத்த ஏற்றுமதி வருமானம் | – | இறக்குமதி உள்ளீடுகளின் பெறுமதி |

**காரணம்** :- கைத்தொழில் ஏற்றுமதிகள் **பெருமளவில் இறக்குமதி உள்ளீடுகளைப் பயன்படுத்துவதனாலாகும்.**

உ-ம் :

* **ஆடைகள்** ஏற்றுமதியை எடுத்துக் கொண்டால் அதற்கு வேண்டிய புடைவைகள், நூல்கள், தெறிகள், சிப்கள், சாயங்கள், அடையாளச் சின்னங்கள், நாடாக்கள் போன்றவை யாவும் இறக்குமதி மூலமே பெறப்படுகின்றன. இவ் இறக்குமதி உள்ளீட்டின் பெறுமதி மொத்த ஏற்றுமதியில் 70% வரை காணப் படுகின்றது.

* **பெற்றோலிய** உற்பத்தியைப் பொறுத்த வரையில் 95% வரை இறக்குமதி உள்ளீடுகளாகும். ஆனால் இலங்கையின் **விவசாய ஏற்றுமதிகளைப்** பொறுத்த வரை இவற்றின் **இறக்குமதி உள்ளீட்டின் பங்கு** 5% இலும் **குறைவானதாகும்.** அதாவது பெருமளவில் உள்நாட்டு உள்ளீடுகளே பயன்படுத்தப்படுகின்றன.

எனவேதான் வெளித் தோற்றத்தின் அடிப்படையில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு மாறியுள்ளதே தவிர **உண்மையான** (தேறிய) **பெறுமதியின்** அடிப்படையில் பெருமளவில் **மாற்றம் ஏற்படவில்லை** எனலாம்.

**1977 ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் :**

1) ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான வேலைத் திட்டங்களைப் பின்பற்றியமை. உ-ம் : 200 ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை உருவாக்கியமை.

3) ஏற்றுமதி வர்த்தக அபிவிருத்திக்கு முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்கியமை.
உ-ம் : வரிவிடுதலை, வரிச்சலுகை, மானியம், கடன் வசதி.

4) ஏற்றுமதி உற்பத்திக் கிராமங்கள் தாபிக்கப்பட்டமை.

5) ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டமை.

6) ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப் பட்டமை.

7) ஏற்றுமதிக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டமை.

8) சர்வதேச ஏற்றுமதிப் பொருள் கண்காட்சிகளில் அதிகம் பங்குபற்றுதல்.

9) தளம்பும் நாணயமாற்று வீதம் பின்பற்றப்பட்டமை.

10) 1992 ஐ ஏற்றுமதி ஆண்டாகவும் 1992 - 2001 ஐ ஏற்றுமதித் தசாப்தமாகவும் பிரகடனப்படுத்தியமை.

**இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் பற்றிய விரிவான பட்டியல் :**

1) **விவசாய ஏற்றுமதிகள் :**

அ) பெருந்தோட்ட விவசாய ஏற்றுமதிகள் : (மரபு ரீதியானவை)
- தேயிலை
- இறப்பர்
- தெங்கு

ஆ) சிறு விவசாய ஏற்றுமதிகள் : (மரபு ரீதியற்றவை)
(தேயிலை, இறப்பர், தெங்கு தவிர்ந்த ஏனையவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வாசனைத் திரவியங்கள் :
  - கறுவா
  - ஏலக்காய்
  - கராம்பு
  - சாதிக்காய்
  - மிளகு

* பானங்கள் :
  - கோப்பி
  - கொக்கோ

* ஏனையவை :
  - வெற்றிலை, பாக்கு, தயாரிக்கப்படாத புகையிலை.
  - பூவகை, காய்வகை, பழ வகை.
  - எள்ளு, எண்ணெய் வகை.

(குறிப்பு :- இவை கலப்புப் பயிர்களாகவும், வீட்டுத் தோட்டப் பயிராகவும் சிறுசிறு நிலப்பரப்பில் பயிரிடப் படுகின்றது)

**2) கைத்தொழில் ஏற்றுமதிகள் :**

அ) புடவைகளும் அணியும் ஆடைகளும்
  - நெய்யப்பட்ட துணிகள்
  - ஆடைகள்

ஆ) பெற்றோலிய உற்பத்திகள் :
  - நப்தா
  - கப்பல்கள், விமானங்களுக்கான எரிபொருள்

இ) ஏனையவை :
  1) உணவு ; குடிவகை, புகையிலை
  2) இறப்பர் உற்பத்திகள்
  3) மட்பாண்ட உற்பத்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) இரசாயன உற்பத்திகள்
5) பிளாஸ்ரிக் உற்பத்திகள்
6) தோலும் காலணியும், தாள், மரப்பொருட்கள்
7) பொறிகளும், கருவிகளும்
8) வைரங்களும் ஆபரணங்களும்
9) ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்.

3) **கனிப்பொருட்கள் ஏற்றுமதிகள் :**

1) இரத்தினக் கற்கள்
2) காரீயம்
3) இல்மனைட்
4) இரும்புத் தாள்கள், இரும்புத் தூண்கள்.

## *IX இறக்குமதிக் கட்டமைப்பு*

"ஒரு நாட்டின் மொத்த இறக்குமதியில் ஒவ்வொரு வகையான இறக்குமதிப் பொருளும் கொண்டிருக்கும் சதவீதப் பங்கை எடுத்துக் கூறுவது இறக்குமதிக் கட்டமைப்பாகும்"

இலங்கையைப் பொறுத்தவரை மொத்த இறக்குமதியில் நுகர்வுப் பொருள், இடைநிலைப் பொருள், முதலீட்டுப் பொருள் என்பவற்றின் சதவீதப் பங்கை எடுத்துக் கூறுவது இறக்குமதிக் கட்டமைப்பு ஆகும்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் இச் சதவீதப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்கள் **இறக்குமதிக் கட்டமைப்பு மாற்றம்** எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் இறக்குமதி அமைப்பு – 1997

| வகை | இறக்குமதியின் சதவீதம் |
|---|---|
| 1) நுகர்வுப் பொருட்கள் | 21% |
| 2) இடைநிலைப் பொருட்கள் | 53% |
| 3) முதலீட்டுப் பொருட்கள் | 23% |
| 4) வகைப்படுத்தப்படாதவை | 3% |
| மொத்தம் 1 + 2 + 3 + 4 | 100 |

## இலங்கையின் இறக்குமதி பற்றிய விரிவான பட்டியல்

1) **நுகர்வுப் பொருட்கள் :**

அ) உணவும் குடிவகையும்

1) அரிசி
2) மா
3) சீனி
4) ஏனைய உணவுப் பொருட்கள் (பால் உற்பத்திகள், கருவாடு, குடிவகை)

ஆ) ஏனைய நுகர்வுப் பொருட்கள்

(வானொலி, T.V., ரயர் ரியூப், மருந்து பொருட்கள், உந்து ஊர்தி, ஈருளிகள்)

2) **இடைநிலைப் பொருட்கள்**

1) பெற்றோலியம்
2) வளமாக்கிகள்
3) இரசாயனம்
4) கோதுமைத் தானியம்
5) புடவையும் ஆடைகளும்
6) ஏனையவை

3) **முதலீட்டுப் பொருட்கள்**

1) பொறிகளும், கருவிகளும்
2) போக்குவரத்துக் கருவிகள்
3) கட்டிடப் பொருட்கள்
4) ஏனைய முதலீட்டுப் பொருட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) வகைப்படுத்தப் படாதவை.

## இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு மாற்றங்கள்

| வகை | இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 1977 | 1987 | 1997 |
| 1. நுகர்வுப் பொருட்கள் | 42 | 23 | 21 |
| - உணவும் குடிவகையும் | 36 | 12 | 13 |
| 2. இடைநிலைப் பொருட்கள் | 44 | 57 | 53 |
| - புடவையும் ஆடைகளும் | 2 | 12 | 24 |
| - பெற்றோலியம் | 24 | 12 | 9 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 12 | 19 | 23 |
| 4. வகைப்படுத்தப் படாதவை | 1 | 1 | 3 |
| மொத்தம் 1 + 2 + 3 + 4 | 100 | 100 | 100 |

1) நுகர்வுப் பொருட்களின் சார்பளவு பங்கு குறைவடைந்-துள்ளது. (தரவுகள்)
2) இடைநிலைப் பொருட்களின் சார்பளவு பங்களிப்பு அதிகரித்துள்ளது. (தரவுகள்)
3) முதலீட்டுப் பொருட்களின் சார்பளவு பங்களிப்பு அதிகரித்துள்ளது. (தரவுகள்)

*** நுகர்வுப் பொருட்களின் பங்கு வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் :**

1) அரிசி இறக்குமதி குறைவடைந்தமை - **காரணம்** உள்நாட்டில் நெல்லுற்பத்தி அதிகரித்தமை.

2) கோதுமை மா இறக்குமதி குறைவடைந்தமை
**காரணம் :**
அ) 1981 ஆம் ஆண்டின்பின் கோதுமைத் தானியம் இடைநிலைப் பொருளாக வகைப்படுத்தப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) திருமலையில் பிறிமா ஆலை தாபித்த பின் மா இறக்குமதி குறைக்கப்பட்டு தானியமாக இறக்குமதி செய்யப்பட்டமை.

இ) உள்நாட்டில் நெல் உற்பத்தி அதிகரித்தமையால் அரிசியின் விலைகள் குறைந்தமை.

3) நுகர்வுப் பொருளாகப் பாகுபடுத்தப்பட்டிருந்த புடவைகள் ஆடை உற்பத்திக்கு மூலப் பொருளாக பயன்படுத்தப் படுவதனால் 1987 இலிருந்து இடைநிலைப் பொருளாக வகைப்படுத்தப்பட்டமை.

## ✻ இடைநிலைப் பொருட்களின் பங்கு அதிகரித்தமைக்கான காரணங்கள் :

1) ஆடைக் கைத்தொழிலின் விரிவாக்கம் காரணமாக அது சார்ந்த இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்தது.

2) ஏனைய கைத்தொழில்களின் விரிவாக்கமும் அவை சார்ந்த இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியினை அதிகரித்தது.
உ - ம் : பெற்றோலியம், இரசாயனம், வளமாக்கி.

3) கோதுமை மாவிற்குப் பதிலாக கோதுமைத் தானியம் இறக்குமதி செய்யப்பட்டமை.

4) ஆடை உற்பத்திக்கு மூலப்பொருளாக பயன்படுத்தப் படுவதால் 1987 ஆம் ஆண்டிலிருந்து புடவைகள் இடைநிலைப் பொருளாக வகைப்படுத்தப் பட்டமை.

5) மூலப் பொருளை இறக்குமதி செய்து முடிவுப் பொருளாக ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதி நோக்கிய கொள்கையை அரசு பின்பற்றியமை.

6) பெற்றோல், வளமாக்கி என்பவற்றின் விலைகள் அதிகரித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **முதலீட்டுப் பொருட்களின் பங்கு அதிகரித்தமைக்கான காரணங்கள் :**

1) கைத்தொழில்துறை வளர்ச்சியடைந்தமையால் - பொறிகளும், கருவிகளும் அதிகளவு இறக்குமதி செய்யப்பட்டமை.

2) தாராள பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டமையாலும், தனியார் போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்பட்டமையாலும் - போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதி அதிகரித்தமை.

3) உள்நாட்டில் முதலீடுகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டமையால் - கட்டிடப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்தமை.

4) வெளிநாட்டு முதலீட்டிற்கு அனுமதியளிக்கப்பட்டமை.

5) தொலைத் தொடர்புத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினால் - முதலீட்டுப் பொருட்களுக்கு கேள்வி அதிகரித்தமை.

(குறிப்பு :- இறக்குமதிக் கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகள் எனக் கேட்கப்படும் போது மேற்கூறப்பட்ட நுகர்வுப் பொருளின் பங்கு குறைதல் இடைநிலை, முதலீட்டுப் பொருளின் பங்கு அதிகரித்தல் ஆகியவற்றுக்கான காரணங்களை தொகுத்து எழுதுக.)

## X *அண்மை ஆண்டுகளில் (1990 களில்) இலங்கையின் வெ.நா. வர்த்தகத்தின் முக்கிய பண்புகள் (1990 - 1997)*

1) **இறக்குமதிகளின் சராசரி வளர்ச்சி** 12% ஆகவும் **ஏற்றுமதி**யின் சராசரியின் வளர்ச்சி 11% ஆகவும் வர்த்தகப் பற்றாக்குறை மொ. உ. நாட்டு உற்பத்தியில் 11% ஆகவும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஏற்றுமதி வளர்ச்சிக்கான பிரதான பங்களிப்பு **மரபு வழியற்ற ஏற்றுமதிகளில்** இருந்தே (தேயிலை - இறப்பர் - தெங்கு தவிர்ந்த) கிடைத்தது. மொ. ஏற்றுமதியில் இவற்றின் பங்கு,

1990 – 68%

1997 – 80% ஆகக் காணப்பட்டது. இது இலங்கையின் ஏற்றுமதி மேலும் **பன்முகப்படுத்தப்பட்டிருப்பதைக்** குறிக்கின்றது.

3) **மொ. இறக்குமதிகளில்** மொ. **நுகர்வுப்** பொருட்களின் பங்கு வீழ்ச்சியடைந்து, **முதலீட்டுப்** பொருட்களின் பங்கு **அதிகரித்தமை** - மூலதன ஆக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மூலதனப் பொருட்களுக்கு **சலுகை அடிப்படையிலான தீர்வை** விதிக்கப்பட்டமை இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

4) இறக்குமதிகளில் **இடைநிலைப் பொருட்கள் முக்கியம்** பெற்றது.

1997 – 53%

5) இலங்கையின் **முதன்மை ஏற்றுமதி சந்தைகள் கைத்தொழில் நாடுகளில்** காணப்பட்டமை. அவற்றுள் முன்னணி வகித்தவை,

1) ஐக்கிய அமெரிக்க நாடுகள்
2) மேற்கு ஐரோப்பா
3) ஜப்பான்

இலங்கையின் இறக்குமதியின் **முதன்மை வழங்குநர்களாக** ஆசிய நாடுகள் காணப்பட்டமை.

1) ஜப்பான்
2) இந்தியா
3) தென்கொரியா
4) ஹொங்கொங்
5) சிங்கப்பூர்

6) இக்காலப் பகுதியில் கைத்தொழில் நாடுகளில் மந்தநிலை காணப்பட்டதுடன் பெரும்பாலான சர்வதேச விலைகளும் வீழ்ச்சியடைந்தன. எனினும் இறப்பர் தெங்கின் விலைகள் உயர்வாக இருந்தன. 1997 இல் தேயிலை இறப்பர் விலைகள் முன்னேற்றம் கண்டன. **ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தியதால், சர்வதேச விலைகளின் வசதியற்ற தன்மையில் இருந்து இலங்கை தன்னைப் பாதுகாத்துக் கொண்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) 1990 இல் இருந்து 1993 வரை முன்னேற்றமடைந்த வ. மா. **விகிதம்** அதன் பின் சற்று குறைவடைந்து 1996 ல் இருந்து மீண்டும் அதிகரித்துள்ளது.

# கடந்தகாலப் பரீட்சை வினாக்கள்

III 1) சர்வதேச வர்த்தகம் **தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகளை** ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்திப் பரிசீலனை செய்க. (1992)

2) ஒரு நாட்டின் காரணி வளப்பேறு (Endowment) அதன் பிறநாட்டு வியாபாரப் பாங்கில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது? (1986)

3) கீழ்வரும் அட்டவணை இரு நாடுகளில் ஆடை, சீனி எனும் இரு பொருள்களில் தொழிலாளர் ஒருவரின் சராசரி வெளியீட்டைக் காட்டுகின்றது.

| | ஆடை (அலகுகள்) | சீனி (அலகுகள்) |
|---|---|---|
| நாடு A | 40 | 60 |
| நாடு B | 20 | 40 |

அ) ஒவ்வொரு நாடும் எந்தப் பொருளில் **ஒப்பீட்டு நலனைக்** கொண்டுள்ளது?

ஆ) ஒவ்வொரு நாட்டிலும் 1000 தொழிலாளர்கள் இருப்பதாகவும், வர்த்தகத்திற்கு முன்னர் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கைத்தொழிலிலும் 500 தொழிலாளர் கையாளப்பட்டதாகவும் கொள்க. ஒப்பீட்டு நலன் அடிப்படையிலான சிறக்குமியல்பு காரணமாக இவ்விரு பொருட்களினதும் **சர்வதேச உற்பத்தி** எவ்வாறு மாறுமென்பதைக் காட்டுக. (1996)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) புள்ளி விபர ரீதியாக இரு நாடு மாதிரியமொன்றினை உதாரணமாகக் கொண்டு சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படையாக ஒப்பீட்டு நயக்கோட்பாட்டினை விளக்குக. உமது உதாரணத்தில் **வர்த்தகத்தினூடாக ஏற்படும் நன்மைகளைக்** காட்டவும்.

(1997 புதிய)

5) இரண்டு நாடுகளும், இரண்டு பண்டங்களும் மட்டுமே உள்ளதான ஒரு எளிய சூழ்நிலையை அனுமானத்திற் கொள்க. ஒரு நாடு இவ்விரு பண்டங்களையும் மற்றைய நாட்டைவிட திறமையுடன் உற்பத்தி செய்ய முடியும் எனவும் அனுமானிக்குக. இத்தகைய ஒரு சூழ்நிலையில் இரு நாடுகளும் பயன்பெறத்தக்க ஒரு வியாபாரச் சாத்தியப்பாடு காணப்படுகிறதா? உங்களது விடையை புள்ளிவிபர உதாரணத்துடன் விளக்கிக் காட்டுக.

(1998 புதிய)

6) இரு நாடுகளையும் இரு பண்டங்களையும் எளிய உதாரணங்களாகப் பயன்படுத்தி 'ஒப்பீட்டு நயத்தின்' அடிப்படையில் இரு நாடுகளும் வர்த்தகத்திலிருந்து நன்மைகளை எவ்வாறு பெறலாம் என்பதை எடுத்துக் காட்டுக.

(1998 பழைய)

7) உற்பத்திச் சாத்திய எல்லை வலது புறமாக அசையாது இருக்க **உற்பத்திச் சாத்திய எல்லைக்கு** வலது புறமாகவுள்ள புள்ளியொன்றினால் காட்டப்படும் பொருள்களின் குவியல் ஒன்றினை ஒரு பொருளாதாரம் நுகர்வு செய்யலாமா? அப்படியானால் அது எவ்வாறு என்பதை விளக்கவும்.

(1997 புதிய)

8) இலங்கை தயாரித்த ஆடைகளை ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்கின்றதென்றும் அந்நாட்டிலிருந்து கணனிகளை இறக்குமதி செய்கிறது என்றும் கொள்க. பொருளியல் கோட்பாடு தொடர்பாக நீர் பெற்றிருக்கும் அறிவைப் பயன்படுத்தி **இவ்வியாபாரக் கோலத்தின் அடிப்படையை விளக்குக.**

(1987)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) 'வடக்கு, தெற்கு' என அழைக்கப்படும் இரண்டு நாடுகள் உண்டென்றும், அவை இரண்டும் அரிசியை-யும், புடவையையும் உற்பத்தி செய்ய முடியுமென்றும் கருதிக் கொள்க. சகல வளங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்படும் போது வடக்கு ஒன்றில் 30 அலகு அரிசியை அல்லது 60 அலகு புடவையையும், தெற்கு ஒன்றில் 40 அலகு அரிசியை அல்லது 100 அலகு புடவையையும் உற்பத்தி செய்ய முடியும். மாறா அமையச் செலவுகளைக் கருதிக் கொள்க. மேலே தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாடும் தொடர்பாகவுள்ள ஒப்பீட்டளவிலான அனுகூலங்களை இனங்கண்டு இரண்டு நாடுகளுக்கும் நன்மை அளிக்கக் கூடிய வியாபாரப் பாங்கைக் குறிப்பிடுக. உங்களது கணிப்புக்களைத் தெளிவாகக் காட்டுக. (1988)

10) 'ஒப்பீட்டு அனுகூலம்' என்ற எண்ணக் கருவை விளக்குக. (1990 விசேட)

IV சர்வதேச வியாபாரத்தினால் ஏற்படும் அனுகூலங்கள் யாவை? (1992)

V பிறநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டின் நோக்கில் வைத்து, அத்தகைய (பிறநாட்டு) வியாபாரத்தின் அனுகூலங்கள் இரண்டையும், பிரதிகூலங்கள் இரண்டையும் சுட்டிக்காட்டி சுருக்கமாக அவற்றை விளக்குக.

(1986)

VI 1) சர்வதேச வியாபாரத்தில் அரசாங்கம் தலையிடுவதற்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (1992)

2) சர்வதேச வர்த்தகப் போட்டியிலிருந்து உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படுவதற்கு ஆதரமான கருத்துக்களைக் கூறுக. (1997 புதிய)

3) பாதுகாப்புத் தொடர்பாக இளந்தொழில்வாதம் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (1998 புதிய)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) குழந்தைப் பருவத்திலுள்ள கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டும் எனும் வாதத்திற்கு விளக்கமளித்து, அதுபற்றிக் கருத்துரை தருக. (1994)

5) 'பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு' என்ற எண்ணக்கருவை விளக்குக. (1990 விசேட)

6) **இறக்குமதி இறுப்பு முறைமை** எவ்வாறு ஒரு நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை முன்னேற்றுவதற்குப் பயன் படலாம் என்பதைச் சுருக்கமாக விளக்குக. (1987)

7) அபிவிருத்தியடைந்த நாடுகளின் சந்தையில் நிலவும் **பாதுகாக்கும் நோக்குடைய போக்குகள்** காரணமாக மூன்றாம் உலக நாடுகள் தமது கைத்தொழில் ஏற்றுமதிகளை விரிவாக்குவது கடினமாக உள்ளது என்று அடிக்கடி கூறப்படுகின்றது. இக்கூற்றின் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? (1987)

## VIII இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு

1) இலங்கையின் **ஏற்றுமதிக் கட்டமைப்பில்** சென்ற **இரு தசாப்தங்களில்** என்ன பிரதான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? (1997 புதிய)

2) சென்ற **பத்து வருடங்களில்** இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் என்ன பிரதான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன? (1997 பழைய)

3) அண்மையாண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள அடிப்படையான மாற்றங்களை இனங்கண்டு, அவை பற்றிக் **கருத்துரைக்குக.** (1996)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

4) அண்மை ஆண்டுகளில் இலங்கையின் ஏற்றுமதிகளின் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் யாவை? இன்று இலங்கையின் **பிரதானமான ஏற்றுமதிகள் பெருந்தோட்ட விளைபொருட்களாகவன்றிக் கைத்தொழிற் பண்டங்களாகவே உள்ளன** எனும் முடிவுக்கு வருதல் எந்த அளவிற்குச் சரியானது? (1995)

1989 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதிகளின் அமைப்பு பின்வருமாறு அமைந்திருந்தது.

| ஏற்றுமதி வகுதிகள் | மொத்தத்தில் % |
|---|---|
| விவசாயப் பண்டங்கள் | 39.2 |
| கைத்தொழிற் பண்டங்கள் | 50.7 |
| கனிப்பொருள் பண்டங்கள் | 4.8 |

அ) மேலே தரப்பட்டுள்ள ஏற்றுமதி வகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்படும் **முக்கியமான இரு பண்டங்களைத்** தருக.

ஆ) இலங்கையின் பிரதான ஏற்றுமதிகள் கைத்தொழிற் பண்டங்களாகும் என முடிவு செய்வது எந்தளவிற்குப் பொருத்தமானதாக இருக்கும்? (1991)

6) 1978 - 88 காலப்பகுதியில் இலங்கையின் மொத்த ஏற்றுமதிப் பெறுமானத்தில் கைத்தொழிற் பொருட்களின் பங்கு 15 சதவீதத்திலிருந்து 48 சதவீதமாக அதிகரித்தது. இதே காலப்பகுதியில் பெருந்தோட்ட உற்பத்திகளின் பங்கு 75 சதவீதமாகக் குறைந்தது. இதன்படி இலங்கையின் **ஏற்றுமதி மூலங்களின் உழைப்புக்கள் கட்டமைப்பு மாற்றத்திற்குள்ளாயிருக்கின்றன** என நீர் முடிவு செய்வீரா? உம்முடைய விடையை விளக்குக. (1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) அ) அண்மை ஆண்டுகளில் இலங்கையினது ஏற்றுமதிகளின் அமைப்பு எவ்வாறு இருந்து வந்துள்ளது எனச் சுருக்கமாக விபரிக்குக. கடந்த ஏறத்தாள பத்தாண்டுகள் காலத்தில் அதில் நீர் இனங்காணக் கூடியதாகவுள்ள மாற்றங்கள் எவை?

தற்பொழுது இலங்கையின் **பிரதான ஏற்றுமதிகள் பெருந்தோட்ட விளைபொருள்களாயிருப்பதிலும் பார்க்க கைத்தொழிற் பொருள்களாக** உள்ளன என முடிவுசெய்தல் எந்தளவிற்குச் சரியானதாகும்? (1990 விசேட)

8) 1992 இல் ரூபா 52588 மில்லியனாக இருந்த இலங்கையினது ஆடை, தைத்த ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி ரூபா 26385 மில்லியனாகவிருந்த எல்லா விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதியின் ஏறக்குறைய இருமடங்காகவிருந்தது. மேற்படி மாற்றத்திற்கு நீர் கூறும் **பொருளாதார முக்கியத்துவம்** யாது? (1993)

9) குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் இலங்கை **சேட்** ஏற்றுமதியின் மூலம் 100 மில்லியன் ரூபாவைச் சம்பாதிக்கின்றது என்றும், **தேயிலை** ஏற்றுமதி மூலமும் அதே தொகையைச் சம்பாதிக்கின்றது என்றும் கொள்க. இந்த இரண்டு பொருட்கள் மூலமும் பெறப்படும் **தேறிய வெளிநாட்டு நாணயமாற்றுச் சம்பாத்தியம்** சமமாக இருக்கும் என்று நீர் கருதுகிறீரா? விளக்குக. (1986)

10) 1986 இன் பின்னர் **புடவைகள் தைத்த ஆடைகள்** என்பவற்றின் ஏற்றுமதிப் பெறுமானம் **தேயிலையின்** ஏற்றுமதிப் பெறுமானத்தை விஞ்சியுள்ளது. புடவைகளும் தைத்த ஆடைகளும் தேயிலையை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டு இலங்கையின் வெளிநாட்டு நாணயமாற்றுச் சம்பாத்தியத்தின் முதன்மை மூலமாகி விட்டன என்று முடிவு செய்வீரா? விளக்கம் தருக. (1988)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

11) இலங்கையின் பிரதான கைத்தொழில் ஏற்றுமதிகள் பற்றிய ஒரு **முக்கிய இயல்பு** சார்பளவாக அவற்றின் **தாழ்வான உள்நாட்டுக் கூட்டிய பெறுமதி**யாகும். இக் கூற்றை விளக்கி அது பற்றிக் **கருத்துரை** வழங்குக. (1987)

12) **'சிறுஏற்றுமதிப் பயிர்கள்'** இவை யாவை? அண்மை ஆண்டுகளில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி உழைப்பில் இவற்றின் **சார்பளவு பங்களிப்பு** யாது? (1987)

13) **ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக** 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு **அரசாங்கம் மேற்கொண்ட ஐந்து வழிமுறைகளைத்** தருக. (1991 விசேட)

## IX இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு

1) அண்மைக்கால ஆண்டுகளில் இலங்கையின் இறக்குமதிகளின் அமைப்பு எவ்வாறு இருந்து வந்துள்ளது எனச் சுருக்கமாக விவரிக்குக. கடந்த ஏறத்தாழ பத்தாண்டு காலத்தில் அதில் நீர் இனங் காணக் கூடியதாகவுள்ள மாற்றங்கள் எவை? இம்மாற்றங்களுக்கு ஏதுவாயிருந்த காரணிகள் யாவை? (1990 விசேட)

2) 1989 ஆம் ஆண்டில் இலங்கையின் இறக்குமதிகளின் அமைப்பு பின்வருமாறு அமைந்திருந்தது.

| **இறக்குமதி வகுதிகள்** | **மொத்தத்தில் %** |
|---|---|
| நுகர்வுப் பண்டங்கள் | 26.1 |
| இடைநிலைப் பண்டங்கள் | 56.4 |
| முதலீட்டுப் பண்டங்கள் | 15.0 |

அ) மேலே தரப்பட்டுள்ள இறக்குமதி வகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் இலங்கையினால் இறக்குமதி செய்யப்படும் **முக்கியமான இரு பண்டங்களைத்** தருக.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆ) அண்மை ஆண்டுகளில் **இடைநிலைப் பண்டங்கள்** இலங்கையினால் **மிகக் கூடுதலாக இறக்குமதி** செய்யப்பட்ட இறக்குமதி வகுதியாக அமைந்தது என்பதற்கு நீர் எவ்வாறு விளக்கம் அளிப்பீர்?

(1991)

3) இலங்கையின் இறக்குமதிகளில் **அரைவாசிக்கு மேல் இடைநிலைப் பொருட்களாகக்** காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் இறக்குமதிகளில் இடைநிலைப் பொருட்கள் எவ்வாறு ஒரு பிரதான பகுதியாக மாறின என்பதை விளக்குக.

(1998 பழைய)

4) இலங்கையின் இறக்குமதிச் செலவுகளில் இடைநிலைப் பொருட்கள் வகிக்கும் பங்கு அண்மை ஆண்டுகளில் 50 சத வீதத்திற்கும் மேலாக அதிகரித்துள்ளது.

அ) **இடைநிலைப் பொருட்களின்** சார்பளவான பங்கில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தியுள்ள காரணிகள் யாவை?

ஆ) இலங்கை இறக்குமதி செய்யும் இடைநிலைப் பொருட்களின் ஐந்து முக்கிய வகுதிகளைக் குறிப்பிடுக. (1989)

## *பயிற்சி வினாக்கள்*

I 1) பின்வருவனவற்றிற்கு **வரைவிலக்கணம்** கூறுக.

அ) சர்வதேச வர்த்தகம்
ஆ) ஏற்றுமதி வியாபாரம்
இ) இறக்குமதி வியாபாரம்

2) உள்நாட்டு வர்த்தகத்துடன் ஒப்பிடுமிடத்து சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் பிரதான வேறுபாடுகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II **காரணிச் செறிவு** (Factor Intensity) எவ்வாறு ஒரு நாட்டின் சர்வதேச வர்த்தகக் கோலத்தை நிர்ணயிக்கின்றது?

III 1) **முழுநயம், ஒப்பீட்டு** நயம் என்பவற்றை வேறுபடுத்துக.

2) ஒப்பீட்டு நன்மையைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

3) அட்டவணை - 1

| பொருட்கள் | அமெரிக்கா | ரசியா |
|---|---|---|
| கோதுமை | 20 | 10 |
| புடைவை | 10 | 08 |

அட்டவணை - 2

| பொருட்கள் | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|
| கோதுமை | 10 | 05 |
| புடைவை | 05 | 10 |

குறிப்பிட்ட நாடுகளிலுள்ள வளங்களில் அரைவாசி ஒவ்வொரு பொருளுற்பத்திக்கும் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படுவதாகவும், நிலையான அமையச் செலவு நிலவுவதாகவும் கருதுக.

அ) முழுநயம், ஒப்பீட்டு நயம் என்பவற்றை விளக்கும் அட்டவணைகள் எவை?

ஆ) சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் உற்பத்தியில் ஈடுபடின் ஒவ்வொரு பொருளிலும் உலக உற்பத்தி எவ்வளவால் அதிகரிக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) A, B ஆகிய இரு நாடுகள் உண்டென்றும், அவை ஒரேயளவு வளங்களைக் கொண்டுள்ளன எனவும், புடைவை, உணவு ஆகிய இரண்டையும் மட்டுமே உற்பத்தி செய்து நுகர்கின்றன எனவும், தம்மிடமுள்ள வளங்களை முழுமையாகவும், திறமையாகவும் எப்பொழுதும் பயன்படுத்துகின்றன எனவும் கருதுக. உணவுற்பத்தியை மட்டுமே மேற்கொள்ளின்

வெளியீடு :- நாடு A – 100 தொன்
நாடு B – 200 தொன்

அதேபோல புடைவை உற்பத்தியை மட்டும் மேற்கொள்ளின் வெளியீடு :-

நாடு A – 100 மீற்றர்
நாடு B – 100 மீற்றர்

இரு நாடுகளிலும் நிலையான அமையச் செலவுகள் காணப்படுவதாகவும், வளங்கள் நாடுகளிடையே அசையும் தன்மையற்றன எனவும் ஆரம்பத்தில் தமது வளங்களை சமமாக இருபொருள் உற்பத்திக்கும் பயன் படுத்துவதாகவும் கருதுக.

அ) நாடுகளது உற்பத்தி சாத்திய எல்லைகளை வரைந்து உற்பத்தி இடம் பெறும் புள்ளியைக் காட்டுக.

ஆ) உணவுப் பொருளில் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளது? புடைவையில் எந்த நாடு ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளது?

இ) சிறப்புத் தேர்ச்சியின் அடிப்படையில் உற்பத்தி மேற்கொண்டால் உலக உற்பத்தியில் எத்தகைய மாற்றம் உருவாகும்?

ஈ) இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கக் கூடிய விதமாக வர்த்தகம் இடம்பெற வேண்டுமாயின் 1 தொன் உணவுக்கான பரிமாற்ற விகிதம் (வர்த்தக மாற்று விகிதம்) எவ்வெல்லைக்குள் அமைதல் வேண்டும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) 1 தொன் உணவு $^{2}/_{3}$ மீற்றர் புடைவைக்காகப் பரிமாற்றப்படுகிறது எனவும், அதன்படி நாடு A 50 மீற்றர் புடைவையை ஏற்றுமதி செய்து நாடு B யிடமிருந்து உணவை இறக்குமதி செய்யின் இரு நாடுகளதும் நுகர்வு மட்டம் எவ்வாறு காணப்படும்?

ஊ) இரு நாடுகளும் வர்த்தகத்தால் பெற்ற நன்மையின் அளவினைக் குறிப்பிடுக.

5) பின்வரும் கூற்றுக்களை ஏற்பீரா? காரணங் கூறுக.

அ) குறுங் காலமொன்றில் ஒரு நாடு தனது உற்பத்தி இயலளவிலும் பார்க்க உயர்வான மட்டமொன்றில் நுகர்வினை மேற்கொள்ளலாம்.


ஆ) குறுங்காலத்தில் மூடிய பொருளாதாரமொன்றில் உற்பத்தியியலளவு எல்லைக்கு வெளிப்புறமாகவுள்ள புள்ளியில் நுகர்வினை மேற்கொள்ள முடியும்.

இ) உற்பத்திச் சாத்திய வளையியின் வடிவம் / சரிவு ஒத்த தன்மையுடைய நாடுகளிடையே வர்த்தகம் இடம்பெற முடியும்.


6) பின்வரும் உற்பத்திச் சாத்திய வளையிகள் பிரதிபலிக்கும் சோடி நாடுகள் முழுமையாகச் சிறப்புத் தேர்ச்சியடைந்து வர்த்தகத்தில் ஈடுபடுதல் சிறந்தது எனக் கருதுகிறீரா? காரணங் கூறுக.

அ)

இலங்கை





இந்தியா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆ)




இ)




ஈ)




7) X, Y என்ற இரு நாடுகளும் தமது வளங்களை இயந்திரம், தேயிலை ஆகிய இரு பொருட்களில் மட்டும் சமமாகப் பயன்படுத்துகின்றன. அவற்றின் வெளியீடுகள் வருமாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நாடு | இயந்திரம் | தேயிலை |
|---|---|---|
| X | 200 | 2000 |
| Y | 1400 | 2400 |

இவ் அட்டவணையின்படி இரு நாடுகளுக்கும் முன்னேற்றகரமாக அமைவது,

(i) X இயந்திர உற்பத்தியிலும் Y தேயிலை உற்பத்தியிலும் சிறப்புத் தேர்ச்சியடைதல்.
(ii) X தேயிலை உற்பத்தியிலும் Y இயந்திர உற்பத்தியிலும் சிறப்புத் தேர்ச்சியடைதல்.
(iii) இரு நாடுகளும் இயந்திரம், தேயிலை ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்தல்.
(iv) X தேயிலை உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி-யடைதல், ஆனால் Y தேயிலை, இயந்திரம் ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்தல்.

8) ஓரலகு உற்பத்திக் காரணியைக் கொண்டு ஐக்கிய இராச்சியத்தில் 3 இயந்திரத்தை அல்லது 3 கார்களை உற்பத்தி செய்ய முடியும். அதேபோன்று ஓரலகு உற்பத்திக் காரணியைக் கொண்டு ஐக்கிய அமெரிக்காவில் 8 இயந்திரங்களை அல்லது 4 கார்களை உற்பத்தி செய்ய முடியும். இயந்திரமும் காரும் மட்டும் தான் பண்டங்கள் எனின் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் வர்த்தகம் இலாபகரமாக அமையக் கூடியது,

(i) வேறுபட்ட அமயச் செலவுகளிருப்பதால் எந்தப் பரிமாற்ற விகிதத்திலும்
(ii) பரிமாற்ற விகிதம் 3 இயந்திரத்திற்கு 2 கார்கள் என அமையுமானால்
(iii) பரிமாற்ற விகிதம் 2 இயந்திரத்திற்கு 3 கார்கள் என அமையுமானால்
(iv) எந்த பரிமாற்ற வீதத்திலும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றுக்கள் :

(i) ஒரு நாடு ஒரு பொருளில் முழுமையாகச் சிறப்புத் தேர்ச்சியடையின் எப்பொழுதும் மிகச் சிறந்த சார்பு நன்மையை அனுபவிக்கும்.

(ii) உள்நாட்டில் ஏற்படும் அமயச் செலவிலும் பார்க்க குறைந்த அமயச் செலவில் சர்வதேச வர்த்தகத்தில் பெறமுடியுமாயின் மட்டுமே நாடுகள் ஒரு பொருளில் சிறப்புத் தேர்ச்சியடைய முயலும்.

(iii) தீர்வைகளுக்கு எதிராக முன்வைக்கப்படும் கருத்து அவை பொருளாதார வளங்களை அவற்றின் மிகத்திறமையான பயன்பாட்டிலிருந்து விலக்கி வைக்கின்றன என்பதாகும்.

(iv) முழுநன்மைக் கோட்பாடே அதிகளவு நடைமுறைக்குப் பொருத்தமானதாகும்.

10) ஓரலகு வளங்களைக் கொண்டு நாடு F, நாடு G உற்பத்தி செய்யக் கூடிய தொகைகளை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| | F | G |
|---|---|---|
| வினா (i) | 12 துணி அல்லது 8 தோடம்பழம் | 10 துணி அல்லது 3 தோடம்பழம் |
| வினா (ii) | 4 துணி அல்லது 12 தோடம்பழம் | 6 துணி அல்லது 18 தோடம்பழம் |
| வினா (iii) | 4 துணி அல்லது 2 தோடம்பழம் | 3 துணி அல்லது 2 தோடம்பழம் |

சுதந்திர வர்த்தகம் இடம்பெறின் பின்வருவனவற்றில் எது நிகழக்கூடியது.

அ) F துணியை ஏற்றுமதி செய்து தோடம்பழத்தை இறக்குமதி செய்யும்.

ஆ) G துணியை ஏற்றுமதி செய்து தோடம்பழத்தை இறக்குமதி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) F துணியையும் தோடம்பழத்தையும் ஏற்றுமதி செய்யும்.

ஈ) G துணியையும் தோடம்பழத்தையும் ஏற்றுமதி செய்யும்.

உ) வர்த்தகம் இடம்பெற மாட்டாது.

சரியான விடைக்குரிய எழுத்தைக் குறிப்பிடுக.

வினா (i) _____ வினா (ii) _____ வினா (iii) _____

11) ஒரு நாடு ஒரு பொருளுற்பத்தியில் ஒப்பீட்டு நயத்தினைக் கொண்டுள்ள போது,

(i) அந்நாடு அப்பொருளில் மற்றைய எல்லா நாட்டையும் விட அதிகமாக உற்பத்தி செய்ய முடியும்.

(ii) அந்நாடு அதன் வர்த்தகப் பங்காளர் நாட்டை விடக் குறைந்த அமயச் செலவில் உற்பத்தி செய்ய முடியும்.

(iii) அந்நாடு ஏனைய எல்லா நாடுகளையும் விட உலக சந்தையில் அதிக பங்கினைக் கொண்டிருக்கும்.

(iv) அந்நாடு ஏனைய எல்லாப் பொருட்களையும் விட அப்பொருளை உலக சந்தைக்கு அதிக அளவில் வழங்கும்.

12)

| பொருட்கள் | தேவையான வளங்களின் அலகுகள் | |
|---|---|---|
| | நாடு A | நாடு B |
| ஒரு தொலைக்காட்சி | 30 | 60 |
| ஒரு வானொலி | 10 | 40 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை குறித்துச் சரியான கூற்று.

(i) நாடு B இருபொருள்களினதும் முழுநன்மை கொண்டுள்ளது.
(ii) நாடு B வானொலி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
(iii) நாடு A தொலைக்காட்சி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
(iv) மேற்கூறிய எந்தக் கூற்றுமில்லை

வினா 13, வினா 14 ஆகியன பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை.

| | கியூபா | ஐ.அமெரிக்கா |
|---|---|---|
| ஓரலகு உள்ளீட்டுக்கான சிகரட் வெளியீடு | 30 | 10 |
| ஓரலகு உள்ளீட்டுக்கான சீனி வெளியீடு | 90 | 50 |

13) பின்வருவனவற்றில் எது மேற்காட்டிய நிலைமைக்குச் சரியானது?

(i) கியூபா சீனி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ளது.
(ii) கியூபா சீனி, சிகரட் ஆகிய இரண்டிலும் முழு நன்மை கொண்டுள்ளது.
(iii) ஐ. அமெரிக்கா சீனி, சிகரட் ஆகிய இரண்டிலும் முழுநன்மை கொண்டுள்ளது.
(iv) ஐ. அமெரிக்கா சீனி உற்பத்தியிலும், கியூபா சிகரட் உற்பத்தியிலும் முழு நன்மையைக் கொண்டுள்ளன.
(v) ஐ. அமெரிக்கா சிகரட் உற்பத்தியிலும், கியூபா சீனி உற்பத்தியிலும் முழுநன்மையைக் கொண்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) பின்வருவனவற்றில் எந்தப் பரிமாற்று விகிதம் கியூபா, ஐ. அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் நன்மையளிக்கக் கூடியது?

(i) 1 சிகரட் 6 சீனிக்காக.
(ii) 1 சிகரட் 4 சீனிக்காக.
(iii) 1 சீனி 8 சிகரட்டுகளுக்காக.
(iv) 1 சீனி 6 சிகரட்டுகளுக்காக.

15) பின்வரும் அட்டவணை ஓரலகு உள்ளீட்டைக் கொண்டு பெறப்படும் இரு பொருட்களின் வெளியீட்டினைக் காட்டுகிறது.

| | ஐக்கிய இராச்சியம் | நைஜீரியா |
|---|---|---|
| இரும்பு அலகுகள் | 240 | 48 |
| உருக்கு அலகுகள் | 80 | 16 |


வர்த்தகத் தடைகள், போக்குவரத்துச் செலவு என்பன இல்லை எனில், பின்வருவனவற்றில் மிகப் பொருத்தமானது,

(i) நைஜீரியா இரும்பையும், உருக்கையும் ஐக்கிய இராச்சியத்திலிருந்து இறக்குமதி செய்யும்.
(ii) ஐக்கிய இராச்சியம் நைஜீரியாவிற்கு இரும்பை ஏற்றுமதி செய்து அங்கிருந்து உருக்கை இறக்குமதி செய்யும்.
(iii) நைஜீரியா ஐக்கிய இராச்சியத்திற்கு இரும்பை ஏற்றுமதி செய்து அங்கிருந்து உருக்கை இறக்குமதி செய்யும்.
(iv) மேற்குறிப்பிட்ட பொருட்களில் இரு நாடுகளுக்கிடையிலும் வர்த்தகம் இடம்பெற மாட்டாது.

16. X, Y ஆகிய இரு நாடுகளின் உற்பத்திச் சாத்திய வளையிகள் முறையே தரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவை குறித்து பின்வருவனவற்றில் மிகவும் பொருத்தமானது.

(i) நாடு X, நாடு Y இற்கு கோதுமையை ஏற்றுமதி செய்யும்.
(ii) நாடு Y, நாடு X இற்கு கோதுமையை ஏற்றுமதி செய்யும்.
(iii) Y இரு உற்பத்தியிலும் சிறப்பிடம் பெறுவதால் வர்த்தகம் இடம்பெற மாட்டாது.
(iv) அமயச் செலவு விகிதங்கள் சமமாகையால் வர்த்தகம் இடம்பெறாது.

17) கீழே தரப்பட்ட தரவுகள் பின்வரும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டது.

அ) நிலையான விகித உற்பத்திச் சாத்தியம்.
ஆ) இரு நாடுகளும் தமது வளங்களை சிறிய கார், பெரிய கார் என்பவற்றிற்குச் சமமாக ஒதுக்கியுள்ளன.
இ) இரு சிறிய கார்கள் ஒரு பெரிய காருக்கு பரிமாற்றப் படுகிறது.

| | பெரிய கார்கள் | சிறிய கார்கள் |
|---|---|---|
| ஐக்கிய இராச்சியம் | 100 | 1000 |
| ஐக்கிய அமெரிக்கா | 700 | 1200 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) இரு நாடுகளும் சிறப்புத் தேர்ச்சி மூலம் பெறும் நன்மையைக் காட்டுக.

(ii) தற்போது இரு நாடுகளும் பெரிய காரை விரும்புவதாகக் க்ருதுக.

அ) இது பெரிய கார்களின் விலையில் என்ன விளைவை உண்டாக்கும்?

ஆ) தற்போது சிறிய மூன்று கார்கள் ஒரு பெரிய காருக்குப் பரிமாற்றம் செய்யப்படுவதாக கருதுக.

(a) இது ஐக்கிய அமெரிக்காவின் வர்த்தக மாற்று விகிதத்தை எவ்விதம் பாதிக்கும்?

(b) இது ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தக மாற்று விகிதத்தை எவ்விதம். பாதிக்கும்?

(c) இது ஐக்கிய அமெரிக்காவின் வாழ்க்கைத் தரத்தை எவ்விதம் பாதிக்கும்?

(d) இது ஐக்கிய இராச்சியத்தின் வாழ்க்கைத் தரத்தை எவ்விதம் பாதிக்கும்?

18) வர்த்தகத்தினால் நன்மை பெறுவது தடுக்கப்படும் மூன்று நிலமைகளைக் குறிப்பிடுக.

VI 1) சர்வதேச வர்த்தகப் பாதுகாப்பிற்கு எதிரான கருத்துக்களைக் கூறுக.

2) சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் இறுப்பு சாராத தடைகள் யாவை?

3) வேறுபடுத்துக


அ) இறுப்பு (Tariff) கோட்டா (Quota)

ஆ) சுங்கத் தீரவை (Customs duties) கலால் தீரவைக்கும் (Excise duties)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) பின்வரும் வரைபடத்தில் DS என்பது உள்நாட்டு நிரம்பலையும், DD என்பது உள்நாட்டுக் கேள்வி-யினையும் Px என்பது வர்த்தகத்தின் முன்னரான உள்நாட்டு விலையையும், WS என்பது உலக சந்தை நிரம்பலையும், Py என்பது உலக சந்தை விலையை-யும் குறிக்கின்றது.




இறக்குமதித் தீர்வை காரணமாக உள்நாட்டில் அப்பொருளின் விலை Pz ஆக உயர்வதனால் உள்நாட்டு நிரம்பலில் ஏற்படும் அதிகரிப்பைக் குறிப்பது,

(i) OC (ii) CD (iii) DF
(iv) FG (v) DE

VII 1) இறக்குமதி தாராளமயமாக்கல் என்றால் என்ன?
2) இதன் அ) அனுகூலங்கள்
ஆ) பிரதிகூலங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VIII) 1) மொத்த ஏற்றுமதி வருமானம் − இறக்குமதி உள்ளீடுகளின் பெறுமதி = ______________
2) இலங்கையின் முக்கிய விவசாய ஏற்றுமதிப் பொருட்கள் யாவை?
3) இலங்கையின் முக்கிய கைத்தொழில் ஏற்றுமதிப் பொருட்கள் யாவை?
4) இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் பின்வருவன-வற்றின் முக்கியத்துவம் யாது?
அ) தேயிலை
ஆ) புடவையும் ஆடைகளும்

IX) 1) இலங்கையின் முக்கிய நுகர்வுப்பொருள் இறக்குமதிகள் யாவை?
2) ஏனைய நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி என்பதற்குள் அடங்கும் முக்கிய பொருட்கள் யாவை?
3) இலங்கையின் முக்கிய இடைநிலைப் பொருள் இறக்குமதிகள் யாவை?

X) அண்மையாண்டுகளில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் நீர் அவதானிக்கும் முக்கிய பண்புகள் யாவை?

# விடைகள்


## *(பயிற்சி வினாக்களில் முக்கியமானவை)*

III 3) அ) முழுநயம் - அட்டவணை 2, ஒப்பீட்டு நயம் - அட்டவணை 1


ஆ) உலக உற்பத்தி அதிகரிப்பு

| பொருட்கள் | அட்டவணை 1 இன்படி | அட்டவணை 2 இன் படி |
|---|---|---|
| துணி | 40 − 30 = 10 | 20 − 15 = 5 |
| பொருட்கள் | 16 − 18 = -2 | 20 − 15 = 5 |

4) அ)




ஆ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) அமயச் செலவு விகிதம்

| | நாடு A | நாடு B |
|---|---|---|
| 1 தொன் உணவு =<br>1மீற்றர் புடைவை = | 1 மீற்றர் புடைவை<br>1 தொன் உணவு | 0.5மீற்றர் புடைவை<br>2 தொன் உணவு |

எனவே உணவில் B நாடும், புடைவையில் A நாடும் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டுள்ளது.

இ) உணவு உற்பத்தி 150 இலிருந்து 200 தொன்னாக அதிகரிக்கும். புடைவை உற்பத்தி 100 ஆக மாறாதிருக்கும்.

ஈ) 1 தொன் உணவுக்கான பரிமாற்ற விகிதம் புடைவையில் 0.5 மீற்றரிற்கு கூடுதலாகவும் 1 மீற்றரிற்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.

உ) பரிமாற்றத்தின் பின் நுகர்வு மட்டம்.

| பொருட்கள் | நாடு A | நாடு B |
|---|---|---|
| உணவு (தொன்)<br>புடைவை (மீற்றர்) | 75<br>50 | 125<br>50 |

ஊ) இரு நாடுகளிலும் புடைவை நுகர்வு மாறாத நிலையில்,
நாடு A யில் உணவு நுகர்வு (75 – 50) 25 தொன்னால் அதிகரித்துள்ளது.
நாடு B யில் உணவு நுகர்வு (125 – 100) 25 தொன்னால் அதிகரித்துள்ளது.

5) அ) ஆம் - சர்வதேச வர்த்தகத்தின் / இறக்குமதியின் மூலம்
ஆ) இல்லை - மூடிய பொருளாதாரமாகையால் இறக்குமதி சாத்தியமில்லை.
இ) இல்லை - பண்டங்களிற்கிடையிலான அமயச் செலவு விகிதம் இரு நாட்டிலும் ஒரேயளவாக இருக்கும்.

6) அ) இல்லை - பண்டங்களின் அமயச் செலவு விகிதம் இரு நாட்டிலும் ஒரேயளவாக இருக்கும்.
ஆ) இல்லை - அதிகரித்துச் செல்லும் அமயச்செலவு காணப்படுவதால் முழுமையாகச் சிறப்புத் தேர்ச்சியடைதல் சிறந்ததல்ல.
இ) ஆம் - பண்டங்களின் அமயச் செலவு விகிதம் இரு நாட்டிலும் வேறுபட்டுள்ளது.
ஈ) ஆம் - அமயச் செலவு விகிதம் வேறுபடுவதோடு இரு நாட்டிலும் குறைந்து செல்லும் அமயச் செலவு காணப்படுகிறது.

7) (ii) 8) (ii) 9) (ii) (iii) (1வது பிழை - காரணம் அதிகரித்துச் செல்லும் அமயச் செலவுள்ள நிலையில் முழுமையாகச் சிறப்புத் தேர்ச்சியடைதல் சிறப்பானதல்ல)

10) (i) ஆ (ii) உ (iii) அ

11) (ii) 12) (iv) 13) (ii) 14) (ii) 15 (iv) 16 (ii)

17) (i) ஐக்கிய இராச்சியம் 2000 சிறிய கார்களையும், ஐக்கிய அமெரிக்கா 1400 பெரிய கார்களையும் உற்பத்தி செய்கிறது.

* அமெரிக்கா 700 பெரிய கார்களுக்காக 1400 சிறிய கார்களைப் பரிமாறுகிறது. சிறப்புத் தேர்ச்சியால் அது பெறும் நன்மை 200 சிறிய கார்களை மேலதிகமாகப் பெறுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* **ஐக்கியராச்சியம்** 600 சிறிய கார்களைக் கொடுத்து 700 பெரிய கார்களைப் பெற்றுள்ளது. அது பெறும் நன்மை 1100 கார்களுக்குப் பதில் 1300 கார்களைப் பெற்றதோடு முன்னைய பெரிய கார்கள் 100க்குப் பதில் தற்போது 600 ஐப் பெற்றுள்ளது.

(ii) அ) கேள்வி அதிகரிப்பதன் காரணமாகப் பெரிய கார்களின் விலை அதிகரிக்கும்.

ஆ) (a) முன்னேற்றமடையும்
(b) மோசமடையச் செய்யும்
(c) உயர்த்தும் (d) குறைக்கும்

VI 4) (ii) CD

## உசாத்துணை நூல்கள் (Referenced Books)


1) Economics Explained – Maunder, Myers, Wall, Miller (1997) P. 61 – 62, 517 – 532
2) Modern Economics – J.Harvey (1993) P.453 – 462
3) Modern Economics – H.L. Ahuja (1997) Part IV P.627 – 647.
4) Economics for Professional and Business Studies – R.Powell (1994) P.363 – 375.
5) First Principles of Economics – Richard G.Lipsey, Colin Harbury (1994) P. 208 – 222.
6) Introductory Economics – Barry Harrison, Charles Smith, Brinley Davies (1992) P. 278 – 301.
7) An Introduction to Modern Economics – Philip Hardwick, Bahadur Khan, John Langmead (1996) P.553 – 565.
8) An Introduction to Positive Economics – Richard G.Lipsey (1993) P.346 – 375.
9) A Level Economics – Ray Powell (1993) P.310 – 324.
10) A Level Economics – Sue Grant & Richard Young (1996) P.214 – 222.
11) Dictinary of Modern Economics – David W.Pearce (1995)
12) கற்றல் கற்பித்தல் வழிகாட்டி க.பொ.த.உயர்தரம், பொருளியல் பகுதி II – தேசிய கல்வி நிறுவக வெளியீடு (1997) பக். 29 – 39.
13) வெளிநாட்டு வியாபாரம் - மா.சின்னத்தம்பி.
14) சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் - இலங்கை மத்திய வங்கி வெளியீடு (1998) பக். 228 – 238
15) இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் - 1977, 1987, 1997.
16) பொருளியல் நோக்கு - மக்கள் வங்கி வெளியீடு (1996 ஏப்ரல்) பக். 26 - 28.
17) புள்ளியிடற் திட்டங்கள் - இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் 1981 - 1998.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டம்

## *அலகு : 6 சர்வதேச வர்த்தகமும் நிதியும்*
## *International Trade & Finance*

| |
|---|
| 6.1 சர்வதேச வர்த்தகம் |
| 6.2 வர்த்தக மாற்று விகிதம் |
| 6.3 சர்வதேச சென்மதி நிலுவை |
| 6.4 நாணய மாற்று வீதம் |
| 6.5 வெளிநாட்டுக் கடன் * கொடை * உதவி – வெளிநாட்டு முதலீடு |
| 6.6 சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு |

***உப அலகுகள் தொடர்ந்து வெளிவரும்.***

கங்கை
கொம்பியூட்டர் பிறின்ட்
கங்கை ஜோணியோ
(பிரவுண் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடத்திட்டம்

## அலகு: 6 சர்வதேச வர்த்தகமும் நிதியும்

## International Trade & Finance

6.1 சர்வதேச வர்த்தகம்

6.2 வர்த்தக மாற்று விகிதம்

6.3 சர்வதேச சென்மதி நிலுவை

6.4 நாணய மாற்று வீதம்

6.5 வெளிநாட்டுக் கடன்
- கொடை
- உதவி

–வெளிநாட்டு முதலீடு

6.6 சர்வதேச பொருளாதார ஒத்துழைப்பு

உப அலகுகள் தொடர்ந்து வெளிவரும்


**கங்கை**

**கொம்பியூட்டர் பிறிண்ட்**

**கங்கை றோணியோ**

(பிறவுண் வீதிக்கு அருகாமையில்)
நாவலர் றோட். யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org